பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 17 வியாழக்கிழமை 01.07.2021 கதிர் 238

**இது ரகசியம் அல்ல!**

வடக்கில் அரசு எடுக்கும் அனைத்துத் திட்டங்களையும் தன்னுடைய சொந்த முயற்சியில் வந்தவை என்று காட்டுவதன் மூலம் 'ஆட்டையைப் போட்டு' செல்வாக்குத் தேடுவது நமது அமுல்பேபியின் வழமையான ரகம்.

அதையும் தாண்டி பக்கம்02 »

## தேர்தல் முறைமை மாற்றம் பற்றி கொழும்பில் முத்தரப்பு சந்திப்பு




தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் முக்கிய மூன்று கட்சிகளுக்கிடையிலான சந்திப்பு நேற்று ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் சந்திப்பில் பங்கேற்றனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன் எம்.பி., எம். வேலுகுமார் எம்.பி., எம்.உதயகுமார் எம்.பி. ஆகியோரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் ☞ 2

## 1,864 பேருக்கு நேற்று தொற்று



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,864 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் ☞ 2

# இலங்கையில் 'டெல்டா' அபாயம்; மீண்டும் பயணத் தடை வருமா?

### அடுத்த வாரம் தீர்மானம் என்கின்றது சுகாதார அமைச்சு



இந்தியாவின் உருமாறிய கொரோனா வைரஸான 'டெல்டா' இலங்கையில் மேலும் பரவக்கூடிய அபாயம் இருக்கின்றது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இலங்கையில் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதா? இல்லையா? என்கின்ற தீர்மானம் அடுத்த வாரத்தில் எடுக்கப்படலாம்.

- இவ்வாறு சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். ☞ 2

## மேலும் 47 பேர் மரணம்; மொத்த உயிரிழப்பு 3,077

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 47 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 16 ஆண்களும், 31பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 77 ஆக எகிறியுள்ளது.

## யாழில் கொரோனோவால் மேலும் இருவர் உயிரிழப்பு

### பருத்தித்துறையில் மரண வீட்டுக்கு சென்றவர்கள் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ☞ 2

## வடக்கு, கிழக்கு மீள் குடியேற்றம் பிரதமரின் செயலர் கீதநாத்திடம்

### நியமனம் நேற்று வழங்கி வைப்பு



வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கான அரசாங்கத்தின் இணைப்பாளராக கீதநாத் காசிலிங்கம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இது தொடர்பாக, அமைச்சரவையின்அங்கீகாரத் ☞ 2

## சீன நிறுவனத்தின் கடலட்டை பண்ணை தொடர்பில் ஆராய்ந்த பின் இறுதி முடிவு

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(இ.கலையமுதன்)

சீன நிறுவனத்தின் கடலட்டை பண்ணை தொடர்பில் நேரடியாக ஆராய்ந்து, இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி, கௌதாரிமுனை பிரதேசத்தில் சீன நிறுவனம் ஒன்றால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் ☞ 2

## பொலிஸாரின் பஸ்ஸை மோதித் தள்ளியது டிப்பர்

### மின் கம்பமும் சேதமடைந்ததால் இருளில் மூழ்கியது தென்மராட்சி




யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தை அடுத்து தென்மராட்சியின் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது.

மீசாலைப் பகுதியில் ☞ 13

## கோண்டாவிலில் வன்முறைக் கும்பல் அட்டூழியம் 4 பேர் படுகாயம்; துண்டாடப்பட்டது ஒருவரின் கை

### வாகனங்கள் உட்பட பெறுமதியான பொருள்கள் சேதம்



கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் இலங்கை போக்குவரத்து சாலைக்குப் பின்புறமாகவுள்ள பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வன்முறையில் குறைந்தது 4 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவரது கை துண்டாடப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக ☞ 13

## யாழ்.மாவட்ட செயலகத்துக்கு பாகிஸ்தான் தூதுவர் வருகை

### அதிகாரிகளுடன் முக்கிய பேச்சு

(இ.கலையமுதன்)

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மொஹமட் சாட் கட்டாக் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்தார்.

அவர், யாழ்.மாவட்ட ☞ 13

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசு பொதுமக்களுக்கு வழங்கும் திட்டங்களை உரியவர்களுக்குக் கிடைக்க விடாமல் தன்னுடைய எடுபிடிகளுக்கும், தான் விரும்பும் நபர்களுக்கும் முறையற்ற விதத்தில் வழங்குவது அடுத்த ரகம். இந்த அடாத்துச் செயலைச் செய்வதற்கு அரச அதிகாரிகளை – பிரதேச செயலர்களில் இருந்து கடை நிலை ஊழியர்கள் வரை அனைவரையும்– தனது எடுபிடிகள் மூலம் கெடுபிடி பண்ணி, அட்டகாசம் புரிவது இந்த விதத்தில் அடங்கும். இதற்குள், பிரதேச செயலருக்கு மேலுள்ள அதிகாரிகள் அடங்குவதில்லையா, அவர்கள் அச்சுறுத்தப்படுவதில்லையா என்ற ஒரு கேள்வி உண்டு. அந்த ரகத்தில் பலரும் தத்தமது தனிப்பட்ட இலக்குகளை அடையவும், 'உழைப்பைத்' தேடிக் கொள்ளவும் தாமே இந்த லைனில் அமுதல்பேபியுடன் சேர்ந்து இயங்குகின்றனர் என்பதுதான் நாக்கைப் பிடுங்கும் விதத்தில் நம்மை அரிக்கும் உண்மை.

ராஜபக்ஷக்களுக்கு இந்தத் தகவலும், இந்தப் பின்னணியும் தெரிந்து, இந்த கொட்டத்தை அடக்குவதற்கு 'செக்' வைத்திருப்பது குறித்து எனது பத்தியில் விவரித்திருந்தேன்.

சாவகச்சேரியில் அரச உதவியில் வீடமைப்பு வசதியைப் பெறுவதற்குத் தகுதி பெற்ற பயனாளிகளின் பட்டியலை வெட்டி, அதில் தமது எடுபிடிகளின் பட்டியலில் இருந்த பெயர்களை வல்வந்தமாக அமுல்பேபி தரப்பு புகுத்திக் கொண்டதும், அதனை ராஜபக்ஷக்களின் பிரதிநிதி நேரில் விசாரித்துக் கண்டறிந்து நேர்சீர் செய்ய நடவடிக்கை எடுத்தமை குறித்தும் ஊடகங்களில் செய்திகள் அம்பலமானமை தெரிந்ததே.

சம்பந்தப்பட்ட பிரதேச செயலரான அம்மணி, அமுல்பேபியின் யாழ் அரச அலுவலகப் பணிமனைக்கு அழைக்கப்பட்டு மிரட்டப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட ஊடகத்துக்கு முகவரியிடப்பட்ட மறுப்புக் கடிதம் ஒன்று அங்கேயே தயார் செய்யப்பட்டு, அங்கு வைத்தே அந்த அம்மணியிடம் ஒப்பம் பெறப்பட்டு, அந்த அம்மணி அனுப்பி வைப்பது போல சம்பந்தப்பட்ட ஊடகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தாகத் தெரிகின்றது.

ஆனால், இப்படி அச்சுறுத்தல் பாணி அடாவடி அரசியல் இனியும் தொடராது என்று நம்பலாம். மீள்குடியேற்ற விடயங்களை நேரடியாகக் கையாள ராஜபக்ஷ அரசு தன்னுடைய இணைப்பாளர் ஒருவரை அமைச்சரவை அங்கீகாரத்துடன் நேற்று உத்தியோகபூர்வமாக நியமித்துள்ளது.

வடக்கைப் பூர்வீகமாகக் கொண்ட இளைஞர் கீதநாத் காசிலிங்கம் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

வடக்கில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் அரசின் சார்பில் வீட்டுத் திட்ட உதவிக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியலை வெளிப்படையாகப் பகிரங்கப்படுத்தி விளம்பரப்பலகையில் ஒட்டுமாறு ஒவ்வொரு பிரதேச செயலரையும் பணிக்கும் வழிகாட்டல் உத்தரவு மேற்படி அரசின் மீள் குடியேற்ற இணைப்பாளரின் முதல் உத்தரவாகப் பறக்க இருப்பதாகத் தெரிகின்றது. அப்படி ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் வீட்டுத் திட்டப் பயனாளிகள் பட்டியல் உத்தியோகபூர்வமாக அம்பலமாகும் போது முறையற்ற விதத்தில் அமுல்பேபியின் எடுபிடிகள் மூலம் கெடுபிடி பண்ணி, இந்த வாய்ப்பைப் பெற்றவர்களின் விவரம் அம்பலமாகும். கெடுபிடி மூலம் அச்சுறுத்தி அரசியல் செய்வோரின் முகத்திரை முற்றாகக் கிழியும் என நம்பலாம்.

சரி, இனி நேற்று நான் சஸ்பென்ஸில் விட்ட விடயத்துக்கு வருவோம்.

அமுல்பேபியின் அராஜக நடவடிக்கைகள், அரசியல் செல்வாக்குத் தேடுவதில் இருந்து எல்லாவற்றிலும் 'ஆட்டையைப் போடும்' சுத்துமாத்துப் போக்குகள் ஆகியவற்றினால் வெறுத்துப் போன ராஜபக்ஷக்கள் அமுல்பேபியின் அடாவடித்தனங்களை ஒட்ட நறுக்கத் தயாராகி விட்டனர் என்று நான் என் பத்தியில் குறிப்பிட்ட அன்றுதான் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ். வந்தார்.

என் பத்தியில் குறிப்பிட்ட விடயத்தினால் அரசியல் அவதானிகளின் கவனிப்பு அதிகரித்திருந்தது. அப்படி நிலைமை இல்லை என்று வெளியில் காட்ட முயன்ற அமுல்பேபி அதற்காக நாமலின் யாழ் 'விசிட்' முழுவதும் நாமலை ஒரே பாடாய்ப் படுத்தி விட்டார்.

யாழ் விசிட்டில் நாமல் வாகனத்தை விட்டு இறங்கிய இடம் எல்லாம் பக்கத்தில் போய் 'பொடிகார்ட்' போல முட்டிக்கொண்டே – இடித்துக் கொண்டே – சஞ்சாரம் பண்ணினார் அமுல்பேபி. ஒன்றும் செய்ய இயலாதவராய் – தவிர்க்க முடியாதவராய் – மிலாந்தியபடி சென்றார் நாமல்.

சுதந்திரமாகத் தனது அரசியல் பணிகளை முன்னெடுக்க விடாமல் ஒட்டிக் கொண்டே நின்று தொல்லை தரும் அமுல்பேபியின் போக்கால் நாமலுக்குப் படு எரிச்சல் என்றார் அவருக்கு நெருக்கமான ஒருவர்.

அப்படி கூறிய நாமலின் நெருக்கமான தோஸ்து ஒருவருக்கு நான் 'செம டோஸ்' கொடுத்தேன்.

*"நாமல் அரசியலுக்கு வந்து பன்னிரண்டு வருடங்களுக்கு மேல். இப்போது மூன்றாவது தடவையாக எம்.பியாக இருக்கின்றார். போதாக்குறைக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர். அரசியலை வலிமையாக முன்னெடுக்கும் பாரம்பரிய குடும்பத்திலிருந்து வந்தவர். ஒரு அமுல்பேபியின் இத்தகைய அட்டகாச அத்துமீறத் தெரிந்தும் கூட – நேரில் உணர்ந்தும் கூட – தடுத்து, கண்டித்து, ஒழுங்குபடுத்த முடியாதவர் – அதுவும் நாமல் போன்ற தகுதி நிலையில் இருந்தும் செய்ய முடியாதவர் – ஒரு நாள் இந்த நாட்டை வழி நடத்தும் தலைவராகுவதற்கு எண்ணுவது வெறும் பகல் கனவாகத்தான் இருக்கும் என்று அரசியல் விமர்சகன் என்ற முறையில் நான் கூறினேன் என அவரிடம் சொல்லுங்கள்!"* – என்றேன்.

நாமலிடம் நேரில் பேச வாய்ப்புக் கிடைக்கும் போது பட்டவர்த்தனமாக அவரிடம் முகத்துக்கு நேரே இதனைக் கூறும் உத்தேசம் உள்ளது. ஏற்பதும் விடுவதும் அவரைப் பொறுத்தது.

அமுல்பேயியின் உச்ச அத்துமீறல் நாமலின் 'விசிட்'டில் கடைசியாக அரங்கேறியது.

நாமல் வந்திறங்கியதுமே அவரின் உதவியாளர் ஒருவர் அமுல்பேயிடம் நேரில் சென்றார். அமைச்சர் நாமலுக்கு இன்று ஐந்து நிகழ்ச்சிகள் தான் பொது நிகழ்வுகள். அரச உத்தியோகபூர்வ நிகழ்வுகள். ஆறாவது நிகழ்வு – கடைசி நிகழ்ச்சி – அவரது தனிப்பட்ட நிகழ்ச்சி என்று தெரிவித்தார்.

அதாவது எம்.பி., குழுக்களின் பிரதித் தலைவர், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவர் ஆகிய கோதாவில் அமைச்சர் நாமலுடன் நீங்கள் பங்குபற்றக் கூடிய அரச பொது நிகழ்வு ஐந்துதான். அவற்றுக்கு நீங்கள் வரலாம். ஆறாவது நிகழ்வு அமைச்சர் நாமலின் தனிப்பட்ட நிகழ்வு. அதற்கு உங்களுக்கு அழைப்பு இல்லை. வராதீர்கள் – என்பதுதான் அதற்கு அர்த்தம்.

டான் ரி.வி. குழுமத் தலைவர் குகநாதன் தனது நிறுவனத்தில் ஒரு தனிப்பட்ட நிகழ்வுக்கு அமைச்சர் நாமலை தனிப்பட அழைத்திருந்தார். அது அரச நிகழ்வு அல்ல.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – குகநாதனின் டான் ரி.விக்குப் போட்டியாக அமுல்பேபியும் ஒரு சேவை நடத்துகின்றார். ஆகவே அழைப்ப இல்லாத அந்த நிகழ்வுக்கு அமுல்பேபி செல்வது பொருத்தமேயற்றது.

மற்றது – ஆனால் அமைச்சர் நாமல் பங்குபற்றும் அந்த நிகழ்வு அவர்களின் தொலைக்காட்சி பற்றியது என்பதனால் அது பற்றிய செய்தி உலகளாவிய தமிழர்கள் மத்தியில் ஒளிபரப்பாகும். யாழில் அமைச்சர் நாமல், பங்குபற்றும் ஒரு நிகழ்வில் தான் இல்லை என்றால் அரசியல் செல்வாக்கையும் ஆட்டை போடுகின்ற தன் முயற்சி அடிபட்டுப் போய்விடும் என்ற கவலை அமுல்பேபிக்கு.

அதனால் டான் ரி.வி. அலுவலக வாசலில் நாமல் போய் இறங்கும் போது வழமைபோல இடித்துக் கொண்டு தன்னைக் செருகிக்கொண்டார் அமுல்பேபி.

டான் ரி.வியின் எந்த இடத்திலும் நாமலைத் தனித்துப் படம் பிடிக்க முடியாதவாறு – இங்கிதம் தெரியாமல் – இடித்துக் கொண்டே நின்றார் அமுல்பேபி.

*'இதென்ன கண்றாவி, சிவபூசையில் கரடி புகுந்த மாதிரி எங்கள் தனித்துவ நிகழ்வில், போட்டி ஒளிபரப்புக் கம்பனியின் பிரகிருதி புகுந்து கொண்டு, எல்லா இடத்திலும் இடித்துக் கொண்டு நின்று சுதந்திரமாக ஒரு படத்தைக் கூட எடுக்க விடாமல் அராஜகம் பண்ணுகின்றாரே. இதுதான் லண்டனில் படித்ததாகக் கூறும் கனவான்தனமா?'* – என்றும் குகநாதனும் டான் ரி.வி. நிர்வாகமும் தலையில் அடித்துக் கொண்டனர் எனத் தகவல்.

அழையா விருந்தாளியாக டான் ரி.விக்குள் நுழைந்து, நாமல் அங்கு இருக்கும் வரை தனித்து ஒரு வேலை செய்ய விடாமல் அவரை இடித்துக் கொண்டே நின்ற அமுல்பேபி, நாமல் அங்கிருந்து புறப்பட்டதும், தன் பரவணிப் பண்பைக் காட்டத் தவறவில்லை. டான் ரி.வி. குழுமத்தில் ஒளிபரப்பான தம் பற்றிய செய்தி ஒன்று குறித்து – சாவகச்சேரி வீட்டுப் பயனாளிகள் தெரிவில் நடந்த அராஜகம் பற்றிய செய்தி குறித்து – டான் ரி.வி. நிர்வாகிகளுடன் இங்கிதம் தெரியாமல் ஒரு வாய்ச் சமா அராஜகம் பண்ணி விட்டுத்தான் டான் ரி.வி. வாசலை விட்டுப் புறப்பட்டிருக்கின்றார் அவர்.

தன்னைத் தனிக் காட்டு ராஜாவாகவும் – ராஜபக்ஷக்கள் தொடங்கி, வடக்கில் பணியாற்றும் கடை நிலை அரச ஊழியர்கள் வரை மற்றும் பொது மக்களையும் சேர்த்து அனைவரையும் ஏமாளியாகவும் – கருதி அரசியல் நடத்தும் குதர்க்கத்தனம் இது.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரியே, இதனை நெறிப்படுத்த முடியாத நாமல் ராஜபக்ஷ, வடக்கு மக்களிடம் ஒரு தலைவராக வருவதற்கு அருகதையேயற்றவர் என்பதான் என் நிலைப்பாடு.

யாராவது இதனை அப்படியே நாமலுக்கு எடுத்துரைத்தால் நல்லது.

– மின்னல் –

## யாழில் கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

93 ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குருநகரைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை வீட்டில் உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புத் தொடர்பில் கேள்வியுற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நேற்றுமுன்தினம் காலை அங்கு சென்றுள்ளார்.

சந்தேகம் கொண்டு உயிரிழந்தவரின் சடலத்தை பி.சி.ஆர். பரிசோதனைக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததுடன் வீட்டிலிருந்தவர்களிடம் மாதிரிகளைப் பெற்றனர்.

அதன் பரிசோதனை முடிவுகளில் உயிரிழந்தவர் மற்றும் அவரது குடும்பத்தில் மூவருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனால் நேற்றுமுன்தினம் காலை மரண வீட்டுக்குச் சென்றவர்கள் அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

டெல்டா மாறுபாடான தொற்று இலங்கையில் பரவியிருப்பதற்கான தெளிவான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

நாடளாவிய ரீதியில் பூகோள மட்டத்தில் எத்தனை பேருக்கு இந்தத் திரிபடைந்த தொற்று ஏற்பட்டிருக்கின்றது என்பது பற்றிய பரிசோதனைகள் தீவிரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சில தொற்றாளர்கள் இந்த 'டெல்டா' மாறுபாடான தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்தவகையில் அவர்களைத் தவிர வேறு நபர்களுக்குத் தொற்று ஏற்பட்டிருப்பதற்கான எந்த உறுதிபடுத்தக்கூடிய தகவலும் இதுவரை சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கவில்லை.

இருந்த போதிலும் நாடு முழுவதிலும் இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்துக்கிடமான நபர்களிடம் பரிசோதனை நடத்துதல் எனப் பல்வேறு முயற்சிகளை நாங்கள் நடத்தி வருகின்றோம்.

இந்நிலையில், நாடு முழுவதிலும் மீண்டும் பயணக்கட்டுப்பாடுகளை விதிப்பதா? இல்லையா? என்பது குறித்து அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும்.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட பயணக்கட்டுப்பாடு காரணமாகவே தற்போது நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை விடக் குறைந்திருக்கின்றது – என்றார்.

## சீன நிறுவனத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:–

கடந்த 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சி அமைத்திருந்த அரசின் அனுமதிகளுடன் குறித்த சீன நிறுவனம், அரியாலைப் பகுதியில் தனியார் காணி ஒன்றைக் குத்தகைக்குப் பெற்று, கடலட்டை குஞ்சு இனப்பெருக்க நிலையம் ஒன்றை ஆரம்பித்திருந்தது.

பின்னர், அரியாலை கடல் பிரதேசத்தில் கடலட்டை குஞ்சு பராமரிப்பு நிலைத்தையும் அமைத்துச் செயற்பட்டு வந்தது.

இந்நிலையில், தற்போது கௌதாரி முனையில் கடலட்டை பண்ணை ஒன்றையும் அமைத்துள்ளார்கள்.

சீன நிறுவனத்துக்கான அனுமதிகள் தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையின் கொழும்பு தலைமை அலுவலகத்தால் வழங்கப்படட்டுள்ளன என்று ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் தொடர்பாக ஆராய்ந்து, பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

நான் விரைவில் குறித்த பிரதேசத்துக்கு நேரடியாகப் பயணம் செய்யவுள்ளேன். அங்கு பிரதேச கடற்றொழிலாளர் சங்கம் உட்பட சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி, சீன நிறுவனம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் – என்றார்.

## தேர்தல் முறைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி., பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோரும், ஜே.வி.பியின் சார்பில் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. ஆகியோரும் பங்கேற்றனர்.

தற்போது அமுலில் உள்ள தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்படுமானால் அது முற்போக்கு சிந்தனையுடன், ஜனநாயகத்தின் பிரகாரம் இடம்பெறவேண்டும். அனைத்து இன மக்கள் மற்றும் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கொள்கை ரீதியில் இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஏனைய கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுடனும் இந்தச் சந்திப்பு தொடரவுள்ளது.

## 1, 864 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 59 ஆயிரத்து 89 ஆக எகிறியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 25 ஆயிரத்து 952 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது.

## வடக்கு கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துடனான நியமனக் கடிதத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து அவர் நேற்றுப் பெற்றுக் கொண்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளராகவும் அவர் பணியாற்றி வருகின்றார் என்பது தெரிந்ததே.

# பொருள்களின் விலையைக் குறைக்கக் கோரி நாவலப்பிட்டியில் நேற்று எதிர்ப்பு நடவடிக்கை

மக்கள் விடுதலை முன்னணியால் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் ஓர் அங்கமாக நாவலப்பிட்டிய நகரிலும் நேற்று (புதன்கிழமை) எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு உரம் வழங்குமாறும், எரிபொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கூறுகையில் –

கொவிட் பிரச்சினை, பயணக்கட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்களால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில் மரத்தில் இருந்து விழுந்தனை மாடு முட்டுவது போல எரிபொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் மேன்மேலும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர். எனவே, மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் எரிபொருள்களின் விலை குறைக்கப்படவேண்டும்.

அதேபோல எவ்வித மாற்று ஏற்பாடுகளும் இன்றி இரசாயன உரப்பயன்பாட்டுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விளைச்சல்களும் அழிவடைந்து வருகின்றன. எனவே, உரத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

ஜே.வி.பியின் செயற்பாட்டாளர்களும், மக்களும் இந்தப்



போராட்டத்தில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாமலுக்குப் பிரதமர் பதவி பொருத்தம் பெரமுன எம்.பி. சஹன் பிரதீப் கருத்து

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதமர் பதவிக்கு பொருத்தமானவர் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப் தெரிவித்துள்ளார்.

மேலும், பிரதமர் பதவியை நாமலுக்கு வழங்கும் பட்சத்தில் அதனை அவர் சிறப்பாக செய்வார் எனவும் சஹன் பிரதீப் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தற்போது அரசாங்கத்தில் உள்ள திறமையானவர்.

இளமையானவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இளைய தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் பட்சத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவி என்பது நாமலுக்கு முடியாத ஒன்றல்ல. அதற்கான கல்வித் தகைமை அவருக்கு உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஒரே நாளில் பெருந்தொகைப் பணம் இலங்கையில் அச்சிடப்பட்டுள்ளதாம்

இலங்கையில் ஒரே நாளில் பெருந்தொகை பணம் அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி கடந்த திங்கட்கிழமை வரலாறு காணாத அளவிற்கு பெருந்தொகைப் பணத்தை ஒரே நாளில் அச்சிட்டுள்ளது என ஆங்கில நாளிதழ ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. வரவு – செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை ஈடு செய்யும் நோக்கில் இவ்வாறு பணம் அச்சிடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வரி வருமானம் குறைந்தமை, கொவிட் தொற்றுக் காரணமாக முடக்க நிலைமைகள், செலவு அதிகரிப்பு போன்ற காரணிகளால் இவ்வாறு பணம் அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி கடந்த திங்கட்கிழமை 20,845 கோடி ரூபா பணம் அச்சிட்டுள்ள நிலையில், அதற்கு முன்னர் கடந்த வாரம் 2,300 கோடி ரூபா பணம் அச்சிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி மொத்த திறைசேரி பத்திரங்களின் பெறுமதி ஒரு ட்ரில்லியன் ரூபாவிற்கு அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 25 ஆம் திகதி அரசாங்கத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட மொத்த பணத்தின் பெறுமதி 919,22 கோடி ரூபாவாக காணப்பட்டதுடன் புதிதாக பணம் அச்சிடப்பட்ட காரணத்தால் இந்த பெறுமதி 112,765 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.




# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பிறந்த நாளில் உருக்கமான பதிவு

நான் மரணிக்கின்ற தினத்தன்று என்னால் எதிர்கால சந்ததிக்கு சிறந்த உதாரணமாக விளங்கமுடியுமென்றால் என் மகிழ்ச்சி அவ்வளவு அளவிட முடியாததாகயிருக்கும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த செவ்வாய்க்கிழமை தனது 76 வயதான பிறந்த நாளை கொண்டாடினார்.

இந்த நிலையில் தனது பிறந்த நாள் அன்று தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றைப் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில் –

'எனக்கு தற்போது எழுபத்தாறு வயது. எழுபத்தாறு வருடங்களின் முன்னர் நான் இந்த உலகிற்கு தனியாகவே வந்தேன். நான் மாத்திரமல்ல அனைவரும் தனியாகவே வந்தோம். ஒருநாள் நான் வெறுங்கையுடன் தனியே போகநேரிடும். ஆனால் இந்த உலகிலிருந்து விடைபெறும் நாள் அன்று நாங்கள் இன்னொரு பொருளை எடுத்துச்செல்கின்றோம், அது எங்கள் வாழ்க்கையில் நாங்கள் செய்த விடயங்களுக்கு ஏற்ப எமக்கு கிடைக்கின்ற நற்பெயர் அல்லது மோசமான பெயர்.

இந்த யதார்த்தத்தை நான் சிறுவயது முதல்



உணர்ந்துள்ளேன். உலகில் எங்கள் வாழ்க்கை காலத்தில் நாங்கள் நாங்கள் எங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கி உலகை சிறந்த இடமாக மாற்றவேண்டும்.

எனது வாழ்நாள் முழுவதும் என்னால் முடிந்தளவிற்கு அந்த கடமையை நிறைவேற்ற முயன்றுள்ளேன். எனது வாழ்நாளில் நான் எனது தேசத்திற்கும் மக்களிற்கும் உலகிற்கும் எதனையாவது செய்திருப்பேன் என்றால் உலகை சிறந்ததாக மாற்றுவதற்காகவே நான் அதனைச் செய்தேன். நான் மரணிக்கின்ற தினத்தன்று என்னால் எதிர்கால சந்ததிக்கு சிறந்த உதாரணமாக விளங்கமுடியுமென்றால் என் மகிழ்ச்சி அவ்வளவு அளவிட முடியாததாகயிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 20 தொலைகாட்சி அலைவரிசைகளில் மாணவர்களுக்குக் கற்றல் நடவடிக்கை

சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைய, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது தொடர்பில் பல்வேறு மூலோபாயங்கள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன எனக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு 20 தொலைக்காட்சி அலைவரிசைகளின் ஊடாக மாணவர்களுக்கு வீடுகளிலிருந்தே கல்வி கற்பதற்கான வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சுனாமி கடல்பேரலை மற்றும் தற்போதைய கொரோனா தொற்றுப் பரவல் அச்சுறுத்தலுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் இந்த தொலைக்காட்சி அலைவரிசை ஊடான மாணவர்களின் கற்றல் நடவடிக்கை பாடசாலைகளைப் போன்று காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா சுட்டிக்காட்டினார்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளித்து, பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பீறிடும் சீன எதிர்ப்பு

**யாழ்ப்பாணம் – கிளிநொச்சி கடல் எல்லைப் பகுதியான கௌதாரி முனையில் சீனத் தொடர்புள்ள கடலட்டை வளர்ப்புக் கம்பனி கடலில் நிலை கொண்டு தன் கைவரிசையைக் காட்டுவது பற்றிய செய்தியை 'காலைக்கதிர்' வெளிப்படுத்தி அம்பலப்படுத்திய நாள் முதல் – கடந்த சில நாள்களாக – வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் தேசிய மட்டத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும் விவகாரமாக அது மாறியிருக்கின்றது.**

**தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் எல்லாம் இவ்விவகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பொங்கி எழுந்துள்ளன. கூட்டமைப்பு எம்.பிக்கள், அரசியல்வாதிகள் ஒருபுறம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றொரு புறம் என்று அந்தக் கடலட்டைப் பண்ணை வரைக் கடல் கடந்து சென்று, பார்த்து, ஆவேச அறிக்கைகள், அறிவிப்புகளை விடுகின்றனர். குறைந்த பட்சம் யாழ்ப்பாணத்தில் ஊடக மாநாடுகளைக் கூட்டி கருத்து வெளியிடுகின்றனர்.**

**தெற்கில் அரச ஆதரவோடு வலுவாகக் கால் பதித்துள்ள சீனா, வடக்கு, கிழக்கிலும் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தி விடும் என்ற இயல்பான அச்சம் தமிழ் மக்களுக்கு உண்டு. அதன் வெளிப்பாடே இந்தப் பிரதிபலிப்பு.**

**இதற்குள் பொதிந்து கிடக்கும் உள்சூக்குமத்தை – தமிழர் தரப்பின் மனதை அதிகம் அரிக்கும் பிரச்சினையை – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வெளிப்படையாகப் புட்டுப் புட்டு வைத்திருக்கின்றார்.**

***"இந்தியாவை வலிந்து முரண்பாட்டுக்கு இழுக்கும் செயற்பாடுகளில் சீனா ஈடுபட்டுள்ளது. அதற்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது."*** **– என சிறிதரன் தெரிவித்திருக்கின்றார்.**

**சரியோ, பிழையோ வடக்கு, கிழக்கைத் தமது தாயக பூமியாக – பாரம்பரிய வரலாற்றுத் தாயகமாக – கொண்டுள்ள தமிழர்களுக்கு, இந்த நாட்டின் தென்பகுதியில் வாழும் சிங்களவர்களை விட பாரம்பரிய உறவில், இரத்த உணர்வில், மிக நெருக்கமானவர்கள் தமிழக உறவுகளே. தமது தொப்புள் கொடி உறவுகளாகவே தமிழகத் தமிழர்களை ஈழத் தமிழர்கள் போற்றி, மதித்து, உறவு கொண்டாடி வந்திருக்கின்றார்கள். பல நூற்றாண்டுகள் கடந்த – வரலாற்று வேரோட்டங்களைக் கொண்ட – பந்தபாசம் அது.**

**தானாட விட்டாலும் தசை ஆடும் என்பதுபோல, ஈழத் தமிழருக்கு ஒன்றென்றதும் தென்னிந்தியா – தமிழகம் – கொதித்துப் பொங்கி எழுவது அதனால்தான்.**

**அத்தகைய தமிழகத்தையும் உள்ளடக்கிய பாரதத்தை, தம் தேசத்துக்கு, ஒப்பாய் ஈழத் தமிழர்கள் எப்போதுமே மதித்து வந்திருக்கின்றார்கள்.**

**குடும்பங்களுக்குள் சச்சரவு இருப்பதுபோல – அண்ணன், தம்பி உறவுக்குள் சின்னச் சின்ன இழுபறி இருக்கின்ற மாதிரி – அவ்வப்போது தமிழகத்துடனும், இந்தியாவுடனும் ஈழத் தமிழர் தரப்பு உரசுப் படாமல் இல்லை. அது தவிர்க்க முடியாத குடும்பப் பிணக்கு.**

**இந்த உறவின் உரிமை கருதித்தான் இலங்கைப் பிரச்சினையில் ஈழத் தமிழர்களுக்காகப் பாரதம் எப்போதும் முழுமையாக நிற்க வேண்டும் என்று நாம் குமுறுகின்றோம். எங்களுக்காக இந்தியத் தரப்பு தொடர்ந்து குரல் கொடுக்கின்றது. அப்படிக் குரல் கொடுக்கும் வீரியம் போதாது என்பதுதான் தமிழர் தரப்பின் குற்றச்சாட்டு, குறை எல்லாமே தவிர, குரல் கொடுப்பதல்ல.**

**அப்படி ஈழத் தமிழர்கள் தொப்புள் கொடி உறவாய்ப் பாசமும், நேசமும் வைப்பதுடன் மட்டுமல்லாமல், பாரதத்தின் அரவணைப்பையும் ஏங்கிக் காத்திருக்க, அந்த பாரதத்தின் பாதுகாப்புக்கு ஆப்பு வைப்பதற்கான தளமாகத் தமிழர் தாயகத்தை சீனா மாற்ற முயலுவதை எந்தத் தமிழனும் ஏற்க மாட்டான் என்பது கண்கூடு.**

**கடல் அட்டை உற்பத்திப் பண்ணையிலும் கூட சீனத் தரப்பு வரக் கூடாது என்ற தமிழர்களின் ஆவேசத்துக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் சூத்திரம் இதுதான்.**

**அபிவிருத்தி என்ற பெயரில்தன்னும் சீனாவை வரவேற்கும் நல்லெண்ணம் தமிழர் தரப்பில் இல்லை என்பதுதான் நிலைமை.**

**வடக்கு, கிழக்கைத் தமது வரலாற்றுத் தாயகமாகக் கொண்ட தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நியாயமான அதிகாரப் பரவலாக்கத்தை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகையில், அதே வடக்கு, கிழக்கில் சீனாவை நிலைகொள்ள வைத்து, அதன் மூலம் நியாயத்துக்கான இந்திய அழுத்தத்துக்கு பதிலடி தர முயல்கின்றது கொழும்பு.**

**அதற்குத் தமிழ் மக்கள் இடம் கொடுக்க மாட்டார்கள் என்ற உண்மையையே சிறிதரன் எம்.பி. உட்பட தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் சீன ஆக்கிரமிப்புக்கு எதிராக இப்போது ஒன்று திரண்டு எழுப்பி வரும் ஆவேசக் குரல்கள் உணர்த்தி நிற்கின்றன.**

**தமிழர் தாயகத்தில் சீனாவும் காலூன்றினால் என்ன என்ற கருத்து நிலைப்பாட்டை நம் மக்கள் மத்தியில் விதைக்க முனையும் ஊடகங்களும், அரசியல்வாதிகளும் தமிழ் மக்களின் இந்த ஆவேச உணர்வெழுச்சியைப் புரிந்து கொள்ள வேண்டும்.**

# மூன்றாவது அணியாக சீனர்களுக்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது!

## அரியநேத்திரன் வேதனை



வடக்கு கிழக்கில் நில அபகரிப்பு தொடர்பாக இதுவரை சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராகவே தமிழ்த் தலைவர்கள் போராடினர். ஆனால் இனி மூன்றாவது அணியாக சீனர்களுக்கு எதிராகவும் போராடவேண்டியுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளரும் பட்டிருப்பு தொகுதி இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் சீனா நிறுவனம் கடலட்டை வளர்ப்பு என்ற போர்வையில் நிலை கொண்டமை தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களில் உரிமைப்போராட்டம் 1948 இல் ஆரம்பமாகி 2021, வரை 73 வருடங்களாக நில அபகரிப்புத் திட்ட மிட்ட குடியேற்றம் அத்துமீறிய பயிர்ச்செய்கை என பலதரப்பட்ட நெருக்குவாதங்களைசிங்களஅரசதலைவர்களாலும் அவர்களால் திட்டமிட்டு கொண்டு வரப்பட்ட மக்களுக்கு எதிராகவும் பல போராட்டங்கள் நடவடிக்கைகளை தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்கள் முன்னெடுத்தனர்.

இதேபோல் 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில் சில முஸ்லிம் அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட காணி அபகரிப்புகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வரலாறுகள் தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளுக்கு இருந்தன.

இவை எல்லாமே இலங்கையை சேர்ந்த மக்களாகவே இருந்து அத்துமீறல்கள் மேற்கொள்ளும்போது தட்டிக்கேட்க வேண்டிய கடப்பாடு காரணமாக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்த வரலாறுகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு.

தற்போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக காலத்து மேய்ச்சல் தரைகளாக இருந்த மயிலத்தமடு மாதவனை மற்றும் கெவிளியாமடு போன்ற இடங்களில் சிங்கள மக்களை குடியேற்றி சேனைப்பயிர், முந்திரி செய்கை என்ற போர்வையில் நில அபகரிப்பு இடம்பெறுகிறது.

இதனைத் தடுக்கும் முயற்சியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றமை எல்லோரும் அறிந்த விடயம். இவைகளைத் தாண்டி இப்போது புதிதாக இன்னுமொரு தலையிடி எமக்கு ஏற்பட்டுள்ளது.

சீனா நாட்டின் பொருளாதார வரவு என்ற போர்வையில் கொழும்புத் துறைமுகத்தின் கொழும்பு நகரில் சில தேவைகளுக்காக அரசால் வரவழைத்த சீனா நாட்டு முதலீட்டாளர்கள் இப்போது கொழும்பு நகரை தாண்டி கொழும்பு மாவட்டத்தையும் தாண்டி வடக்கு மகாணத்தில் காலூன்றி கடலோர வளங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் எமது கடல் தொழிலாளர்களின் தொழில் பாதிப்படைவதுடன் நிலவளங்களும் சுரண்டப்படும் நிலை உள்ளது, இது இன்னும் சில காலத்தால் கிழக்கு மாகாணத்திலும் சீனர்களின் தொல்லைகளால் எமக்கும் பாதிப்புகள் ஏற்படும்.

வெறுமனமே கொழும்பு மட்டும் என்ற நிலை இலங்கையில் உள்ள 24, மாவட்டங்களிலும் ஏதோ ஒரு வகையில் பாதிப்புகள் வள ரீதியாக ஏற்படத்தான் போகின்றன.

வேறு எந்த மாவட்டங்களிலும் அவர்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் விரும்பியவைகளை செய்யட்டும். ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளும் இவ்வாறான அத்துமீறல்களை அனுமதிக்க முடியாது.

இதுவரை காலமும் தமிழ்த் தேசிய தலைமைகள் சிங்கள மற்றும் முஸ்லிம் அரசியல் வாதிகளின் காணி அபகரிப்புக்கு எதிராகவே போராடி வரலாறு உண்டு. இனி சீன நாட்டு முதலீட்டாளர்களுக்கு எதிராகவும் போராட வேண்டிய நிலை உள்ளது என்பது உண்மை எனவும் மேலும் கூறினார்.

# யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட சிவன் வீதி கார்ப்பெட் வீதியாக மாற்றம்



**ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட 3 ஆம் வட்டாரத்தின் சிவன் வீதி கார்ப்பெட் வீதியாக நேற்றுமுன்தினம் (செவ்வாய்க் கிழமை) புனரமைப்புச் செய்யப்பட்டது.

பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியையும் ஆலய வீதியின் முடமாவடிச் சந்தியையும் இணைக்கும் சிவன் வீதியே முதல் தடவையாக தார் படுக்கை வீதியாக செப்பனிடப் பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் கீழ் கொண்டு வரப்பட்ட ஐ றோட் திட்டத்தின் ஊடாக தற்போது செப்பனிடப்படும் வீதிகளில் இந்த வீதியும் 2016 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டது.

இவ்வாறு சீர் செய்யப்பட்ட வீதி நல்லூர் ஆலயம், யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் பல திணைக்களங்களுக்குச் செல்லும் முக்கிய வீதியாகக் காணப்படுவதோடு யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் நல்லூர் பிரதேச சபைக்கும் இடையிலான எல்லை வீதியாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் 130 குடும்பங்களுக்கு உதவி



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த புதன்கிழமை மூன்று பிரதேசங்களில் 130 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடமேல் மாகாணத்தின் புத்தளம் – சேனைக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 70 குடும்பங்களுக்கு புத்தளம் முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகத்தினரின் கோரிக்கையை ஏற்று தலா 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியிலான உலருணவுப் பொதிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

அதேசமயம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உடுப்பிட்டி தெற்கு கிராம சேவகர் பிரிவில் 30 குடும்பங்களுக்கும், வல்வெட்டித்துறை நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் 30 பேருக்கும் ஆச்சிரமத்தால் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**தொகுப்பு:-**
**எஸ். சாரலன்**

## 37ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**361. இலங்கையில் கடலுணவு உற்பத்தியில் தற்போது முதலிடம் வகிக்கும் மாவட்டம் எது?**
**362. இலங்கையின் மொத்த கடலோர நீளம் எவ்வளவு?**
**363. அண்மையில் இலங்கையில் எக் கொரோனா சிகிச்சை நிலையத்தினுள் நாய் நுழைந்து சிகிச்சை பெற்றவர்களை கடித்தது?**
**364. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யார்?**
**365. கிளியோபட்ரா பிறந்த நாடு எது?**
**366. உலகில் பரப்பளவில் மிகப் பெரிய நாடு எது?**
**367. மா, றி, அ, வ, ர், க, வு, பூ இவ் எழுத்துக்களை பயன்படுத்தி ஒரு தமிழ்ச் சொல்லை உருவாக்குக?**
**368. மேற்கிந்தியத் தீவுகள் அணி ரி - 20 உலகக் கோப் பையை எத்தனை தடவை கைப்பற்றியுள்ளது?**
**369. உலகில் மிக உயரமான மலை எது?**
**370. சீனாவின் துயரம் என அழைக்கப்படுவது எது?**

பெயர் :- ................................................ அடையாள அட்டை:- ...............................
முகவரி :- ............................................... மின்னஞ்சல் முகவரி:- ..............................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 35ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**341. முல்லைத்தீவு**
**342. இந்தியா**
**343. 01**
**344. 10, 165**
**345.ரணில் விக்கிரசிங்க**
**346. ஆசியாக்கண்டம்**
**347. சீனா**
**348. 30ஆயிரம்**
**349. காட்டுக்கோழி**
**350. வெள்ளை**

## 29ஆம் திகதி வெளியான 35ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1.ஜெ. வினோஜன் - குடத்தனை (09 சரி)
2.த.சராதரன் - குப்பிளான் (09 சரி)
3.எஸ். சதுர்ஜினி - அல்வாய் (08 சரி)
4. ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (07 சரி)
5.ஏ.சி.ஸ்ரீதரன் - கொழும்பு (08 சரி)
6.எச். றிஸ்மிஜா - கண்டி (06 சரி)
7.செ. ஸ்ரீஇராமச்சந்திரன் (07 சரி)
8.எம். வர்ணபாலன் - யாழ்ப்பாணம் (08 சரி)
9.ஏ.துஷான் - நீர்வேலி - (07 சரி)

# ஆறு மாதங்களாக சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பெண்!

## வெளியாகியுள்ள அதிர்ச்சித் தகவல்

36 வயதான தமிழ் பெண் ஒருவரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுமார் ஆறு மாதங்களாக இந்தப் பெண் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது குற்றப் புலனாய்வுப் பிரிவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு நீதிமன்றம், சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சிலருக்கு உச்ச நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி உச்ச நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கல்லடி பிரதேசத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

தடுப்புக் காவலில் வைப்பதற்காக பெற்றுக் கொண்ட உத்தரவு எதனையும் இதுவரையில் அதிகாரிகள் அந்தப் பெண்ணின் சட்டத்தரணிகளுக்குக் காண்பிக்கவில்லை என்பதுடன் அந்தப் பெண்ணைச் சந்திப்பதற்குக் கூட சட்டத்தரணிகளுக்கு இடமளிக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

என்ன காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டார் என்பது தொடர்பாக அறிந்து கொள்ள அந்தப் பெண்ணுக்கும் அவரது உறவினருக்கும் உரிமையுண்டு எனவும், சட்டத்தரணி ஒருவரை சந்தித்து சேவை பெற்றுக்கொள்ள அந்தப் பெண்ணுக்கு அரசியல் அமைப்பின் பிரகாரம் உரிமை உண்டு எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் சருக் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் பணியாற்றும் காதலரை சந்திக்க அந்த நாட்டுக்குச் செல்வதற்கு ஆயத்தமான போது இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெண்ணை நீதிமன்றில் முன்னிலை படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும், இவ்வாறு தடுத்து வைத்து விசாரணை செய்வது சட்டவிரோதமானது எனவும் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். இந்த மனுவில் சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர், குற்ற விசாரணைப் பிரிவு பணிப்பாளர் உள்ளிட்ட சிலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# தலைமன்னார் பகுதியில் பி.சி.ஆர். முன்னெடுப்பு





மன்னார், ஜூலை 01

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்த கொவிட் தொற்று காரணமாக தலைமன்னார், பியர் மேற்கு மற்றும் தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த வாரம் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அப்பகுதியில் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகள் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னார் பியர் பகுதியில் 62 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் குறித்த இரு கிராம அலுவலகர் பிரிவுகளும் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை ஆகியவை இணைந்து குறித்த பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளனர்.

அந்த வகையில் மொத்தமாக 368 நபர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாதிரிகள் கொழும்பு முல்லேரியா வைத்தியசாலைக்கு மேலதிக பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகளில் தொற்று உறுதி செய்யப்படும் பட்சத்தில் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்களின் முதல் நிலை தொடர்பாளர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 9 | கணிதம் | அலகு 11

## கணிகருவி - விடைகள்

மேலதிக விளக்கத்துக்கு

1. 76 + 83 =
ON → 7 → 6 → + → 8 → 3 → 159

2. 42 + 76 - 25 =
ON → 4 → 2 → + → 7 → 6 → - → 2 → 5 → 43

3. 235 - 143
ON → 2 → 3 → 5 → - → 1 → 4 → 3 → 92

4. 12 x 4 ÷ 3
ON → 1 → 2 → x → 4 → ÷ → 3 → 16

5. 32 x 26
ON → 3 → 2 → x → 2 → 6 → 832

6. 240 ÷ 12
ON → 2 → 4 → 0 → ÷ → 1 → 2 → 20

7. 12.5 + 8.5
ON → 1 → 2 → • → 5 → + → 8 → • → 5 → 21

8. 91.2 - 48.8
ON → 9 → 1 → • → 2 → - → 4 → 8 → • → 8 → 42.4

9. 1.2 x 4.5
ON → 1 → • → 2 → • → x → 4 → • → 5 → 5.4

10. 16.5 ÷ 3
ON → 1 → 6 → • → 5 → ÷ → 3 → 5.4

**பயிற்சி - 02**

### சாதாரண கணிகருவி

1. 45 + 12 ÷ 3
ON → 4 → 5 → + → 1 → 2 → ÷ → 3 → 19

2. 60 - 15 x 3
ON → 6 → 0 → - → 1 → 5 → x → 3 → 135

3. 12 x 15 - 25
ON → 1 → 2 → x → 1 → 5 → - → 2 → 5 → 155

4. 120 x 8 ÷ 4
ON → 1 → 2 → 0 → x → 8 → ÷ → 4 → 240

5. 150 - 40 ÷ 5
ON → 1 → 5 → 0 → - → 4 → 0 → ÷ → 5 → 22

### விஞ்ஞான கணிகருவி

1. 45 + 12 ÷ 3
ON → 4 → 5 → + → 1 → 2 → ÷ → 3 → 49

2. 60 - 15 x 3
ON → 6 → 0 → - → 1 → 5 → x → 3 → 15

3. 12 x 15 - 25
ON → 1 → 2 → x → 1 → 5 → - → 2 → 5 → 155

4. 120 x 8 ÷ 4
ON → 1 → 2 → 0 → x → 8 → ÷ → 4 → 540

5. 150 - 40 ÷ 5
ON → 1 → 5 → 0 → - → 4 → 0 → ÷ → 5 → 142

**பயிற்சிகள் 03**

x சாவியைப் பயன்படுத்துதல்

01) 1. 9000 x 12% =
ON → 9 → 0 → 0 → 0 → x → 1 → 2 → Shift → = → 1080

2. 550 x 8% =
ON → 5 → 5 → 0 → x → 8 → Shift → = → 44

3. 12.5 x 10% =
ON → 1 → 2 → • → 5 → x → 1 → 0 → Shift → = → 1.25

4. 850 x 40% =
ON → 8 → 5 → 0 → x → 4 → 0 → Shift → = → 340

5. 6500 x 4.5% =
ON → 6 → 5 → 0 → 0 → x → 4 → • → 5 → Shift → = → 2925

6. 2400 x 12.5% =
ON → 2 → 4 → 0 → 0 → x → 1 → 2 → • → 5 → Shift → = → 300

02) 1. $\frac{1}{5}$
ON → 1 → ÷ → 5 → Shift → = (%) → = → 20

2. $\frac{12}{25}$
ON → 1 → 2 → ÷ → 2 → 5 → Shift → = (%) → = → 48

3. $\frac{7}{20}$
ON → 7 → ÷ → 2 → 0 → Shift → = (%) → = → 35

4. $\frac{3}{10}$
ON → 3 → ÷ → 1 → 0 → Shift → = (%) → = → 30

5. $\frac{3}{23}$
ON → 3 → ÷ → 2 → 3 → Shift → = (%) → = → 13.04

03) 2kg 200g
ON → 4 → 0 → 0 → ÷ → 2 → 0 → 0 → 0 → Shift → = (%) → = → 20%

04) ON → 2 → 4 → 0 → 0 → ÷ → 6 → 0 → 0 → 0 → 0 → Shift → = (%) → = → 40%

**பயிற்சி - 04**

1. $12^2$ = ON → 1 → 2 → $x^2$ → = → 144

2. $4.5^2$ = ON → 4 → • → 5 → $x^2$ → = → 20.25

3. $3^2 \times 4^2$ = ON → 3 → $x^2$ → 4 → $x^2$ → = → 144

4. $10^2 + 5^2$ = ON → 1 → 0 → $x^2$ → 5 → $x^2$ → = → 125

5. $8^2 \div 4^2$ = ON → 8 → $x^2$ → ÷ → 4 → $x^2$ → = → 4

6. $2435^2$ = ON → 2 → 4 → 3 → 5 → $x^2$ → = → 5929225

7. $13^2 - 5^2 \times 3$ = ON → 1 → 3 → $x^2$ → - → 5 → $x^2$ → x → 3 → = → 94

**பயிற்சி - 05**

1. $\sqrt{81}$ = ON → √ → 8 → 1 → = → 9

2. $\sqrt{196}$ = ON → √ → 1 → 9 → 6 → = → 14

3. $\sqrt{900}$ = ON → √ → 9 → 0 → 0 → = → 30

4. $\sqrt{7.84}$ = ON → √ → 7 → • → 8 → 4 → = → 2.8

5. $\sqrt{20449}$ = ON → √ → 2 → 0 → 4 → 4 → 9 → = → 143

6. $\sqrt{10.24}$ = ON → √ → 1 → 0 → • → 2 → 4 → = → 312

7. $\sqrt{7225}$ = ON → √ → 7 → 2 → 2 → 5 → = → 85

ஆக்கம் :- தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு ஞானமணி இரத்தினசிங்கம்
(ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/ தேசிய கல்வியியற் கல்லூரி

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர்.
'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர்.
இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 52

**158. அந்த சம்பவங்கள் எவை?**

பல இருந்தாலும்,தொடர்ந்து நடந்து கொண்ட போரினால் முக்கியமான இரண்டைக் குறிப்பிடுகிறேன்.

ஒன்று–1999இல் சந்திரிகா இரண்டாவது முறையாக ஜனாதிபதியாவதற்கு தேர்தல் பிரச்சாரம் செய்தபோது அவரின் மேல் நடத்தப்பட்ட குண்டு தாக்குதல். இதில் அவர் உயிர் பிழைத்தாலும் ஒரு கண்ணைப் பறி கொடுத்தார். முப்பது பேர் வரை இறக்கப் பலர் காயப் பட்டார்கள். இதனை தாங்கள் செய்தார்கள் என விடு தலைப் புலிகள் ஒத்துக் கொள்ளவில்லை. அவர் இரண்டாவது முறையும் ஜனாதிபதியானார். ஆனால் விடுதலைப் புலிகளில் அவநம்பிக்கையும் வெறுப்பு ணர்வும் ஒரு பாதிக்கப்பட்டவரின் அனுபவங்களால் பெருமளவில் கூடியிருந்தன.

அடுத்தது – தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் தற்கொலை குண்டுத் தாக்குதலினால் 29 ஜூலை 1999 இல் கொல் லப்பட்டது. முதலில் விடுதலைப் புலிகள் இதனையும் மறுத்தனர். இவை இரண்டுக்கும் பல காரணங்கள், நியாயங்கள் சொல்லப்பட்டாலும் பின்னணி ஒன்று தான்.

1994 இல் சந்திரிகா பிரதமராகவும் பின்னர் ஜனாதி பதியாகவும் கொடுத்த வாக்குறுதிகளின் படி தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வுத் திட்டத்தை ஏற்படுத்த விடு தலைப் புலிகள் உட்பட மற்ற தமிழ்க் கட்சிகளையும் அழைத்து, அதனை உருவாக்க தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கலாநிதி நீலன் திருச்செல்வத்தை யும், தமது கட்சியின் சார்பில் கலாநிதி ஜி.எல். பீரிஸை யும் ஈடுபடுத்தினார். அவர்கள் இருவரும் குடியரசு சட்ட முறைகளில் பரந்த அறிவு கொண்டவர்கள். இரு வரிலும் கலாநிதி நீலன் சர்வதேசத்துக்கு நன்கு அறிமு கமானவர். குடியரசு முறைகள், அவற்றை ஒட்டிய தேர்தல் முறைகள் பற்றி அறிக்கைகள் தருவதற்காக சர்வதேச சமூக நிறுவனங்களால் பார்வையாளராக பாகிஸ்தான், சிலி, கசகஸ்தான், எதியோப்பியா, தென் ஆபிரிக்கா, நைஜீரியா போன்ற நாடுகளுக்கு அனுப் பப்பட்டவர். சர்வதேச அமைப்பான சிறுபான்மை மக் களின் உரிமைக்கான Minority Rights Groups நிலையத்தின் இயக்குனராக 1994 இல் இருந்து இயங்கி அதன் தலைவராக 1999 இல் பதவி ஏற்றவர். ஆகவே இருவரையும் கொல்ல எடுத்த முயற்சிகள் – முக்கிய மாக தமிழராக சர்வதேசத்தின் உணர்வில் தமிழருக் காகப் பாடுபட்டுக்கொண்டிருந்த கலாநிதி நீலனின் கொலை – பலத்த எதிர்ப்பலைகளை உருவாக்கியது.

விடுதலைப் புலிகளோ தாங்கள் மட்டுமே தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்கள், ஏதாவது தீர்வு பற்றித் தீர்மானிக்க அவர்களின் அதிகாரம் பெற்றவர்கள், ஆதலால் மற்றத் தமிழ்க் கட்சிகள் – முக்கியமாக தமி ழர் விடுதலைக் கூட்டணியினர் – பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கப்படக்கூடாது, கலாநிதி நீலன் திருச்செல்வம் வெளியேற வேண்டும் என்ற நிபந்தனைகளை வைத்து கலாநிதி நீலனுக்கு வெளியேறச் சொல்லி நேரடியாக அச்சுறுத்தல் கொடுத்தார்கள்.

ஒரு சமாதானத் தீர்வுக்காக சர்வதேச நாடுகள் சந் திரிகாவை நிர்பந்தித்து ஆதரவு தந்தன. விடுதலைப் புலிகளுக்கும் இவை தெரியப்படுத்தப்பட்டன. பேச்சு வார்த்தைகளை முறிப்பதற்கு விடுதலைப் புலிகள் தொடர்ந்து ஏற்படுத்திய நடவடிக்கைகள் சர்வதேசத் திற்கு நம்பிக்கை தருவனவாக இருக்கவில்லை. அவர் களது வெளிநாட்டின் பிரதிநிதிகளும் பொறுப்பாளர்க ளும் அந்த சரிவுகளைக் கண்டார்கள். ஆயினும் இவை ஸ்ரீலங்காவினதும் அவர்களுடன் சேர்ந்து பாடும்



துரோகிகளாலும் திரிவுபடுத்தப்பட்டு நடத்தப்படும் பிரச்சாரத்தின் விளைவுகளே, வன்னி இதனைக் கணித்துக் கொள்ளும் என்றும், இன்னுமொரு இராணுவ வெற்றியில் சர்வதேசம் திரும்பிப் பார்க் கும் என்றும் எண்ணினார்.


**159. கலாநிதி நீலனின் கொலை என்ன பாதிப் புக்களை ஏற்படுத்தியது?**

அதனைத் தமிழ் மக்களும், அவர்களது சர்வ தேச பிரசாரர்களும், ஊடகங்களும் கையாண்ட விதங்கள் முக்கியமாகப் பாதிப்புக்களை ஏற்படுத் தின. தாங்கள் செய்வதை யாரும் தட்டிக் கேட்க முடியாது என்ற மனோபாவத்தின் தொனியே பிரதானமாகத் தெரிந்தது. ஒரு நியாயம் வெளிப்பட வில்லை. தாங்கள் தங்களுக்கு எதிரானவர்கள் எனக் கணிக்கப்படுபவர்களை அழிப்போம், அந்த பழிவாங்கலை தமது விடுதலை நியாயப்படுத்தும் என்ற எண்ணமே வியாபித்திருந்தது. உதாரணத் திற்கு சிவநாயகத்திற்கு அவர் Hot Spring இன் ஓகஸ்ட் – செப்டெம்பர் 1999 பதிவில் இதனை நியாயப்படுத்தி வெளியிட்ட விதம், அந்த எழுத்தை கலாகித்து லண்டனிலிருந்து ஒரு புத்திஜீவி அமைப்புக்களுக்காக பாராட்டு தெரிவித்து எழுதி யதை பார்க்கலாம் அதை உணர்வதற்காக அந்த பதிப்பின் முன்பக்க அட்டையையும் தருகிறேன்.

இதை எழுதியவர் அந்த சமயத்தில் பிரித்தானி யாவின் தமிழ் சங்கங்களின் கூட்டு சம்மேளனத் தின் The Federation of Tamil Associations, United Kingdom பொது காரியதரிசி. தொழில் ரீதி யாக மருத்துவர்.

அவர் என்ன எழுதினார் என்ற விவரத்தை நாளை பார்ப்போம்.

(வளரும்....)



# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 9** | **கணிதம்** | **அலகு 12**

## சுட்டிகள்

**எண்களின் வலுக்கள்**

$2^0 = 1$
$2^1 = 2$
$2^2 = 2\times2 = 4$
$2^3 = 2\times2\times2 = 8$
$2^4 = 2\times2\times2\times2 = 16$
$2^5 = 2\times2\times2\times2\times2 = 32$

**அட்சரகணித குறியீடுகளை கொண்ட வலுக்கள்**

$x^0 = 1$
$x^1 = x$
$x^2 = x \times x$
$x^3 = x \times x \times x$
$x^4 = x \times x \times x \times x$
$x^5 = x \times x \times x \times x \times x$




**01. பெருக்கமாகத் தரப்பட்டதை சுட்டிவடிவில் எழுதுக**

1. $2 \times 2 \times 2 \times 2 \times 2$ $= 2^5$
2. $3 \times 3 \times 3 \times 3$ =………………………..
3. $a\times a \times a \times a \times a \times a$ =………………………..
4. $2 \times 2 \times 2 \times y \times y$ =………………………..
5. $5 \times 5 \times m \times m \times m \times a \times a$ =………………………..
6. $2 \times 2 \times 2 \times 2 \times 2 \times 2 \times p \times$ =………………………..

**02. பெருக்கத்தின் வலுவை வலுக்களின் பெருக்கமாக எழுதுதல்**

1. $(2 \times 3 \times 5)^4 = 2^4 \times 3^4 \times 5^4$
2. $(3 \times y)^{10}$ = …………………………..
3. $(2 \times a \times b)^{12}$ = …………………………..
4. $(5 \times 2 \times x)^6$ = …………………………..
5. $(m \times a \times b)^5$ = …………………………..
6. $(a \times b)^5$ = …………………………..

**03. வலுக்களின் பெருக்கத்தை பெருக்கத்தின் வலுவாக எழுதுதல்.**

1. $m^8 \times y^8 = (m \times y)^8 = (my)^8$
2. $m^8 \times n^8$ = …………………………
3. $5^6 \times y^6 \times m^6$ = …………………………
4. $2^{10} \times y^{10} \times a^{10}$ = …………………………
5. $5^6 \times p^6 \times q^6$ = …………………………
6. $2^4 \times a^4 \times b^4$ = …………………………

**04.சமனான அடிகளை உடைய வலுக்களைப் பெருக்குதல்**

> **விதி - 1**
> சம அடிகளைக் கொண்ட எண்கள் பெருக்கப்படும் போது அவற்றின் அடுக்குகள் கூட்டப்படும்.
> $x^m + x^n = x^{m+n}$

1. $3^2 \times 3^3$
$= 3 \times 3 \times 3 \times 3 \times 3$
$= 3^5$
$3^2 \times 3^3 = 3^5$

* அடிகள் சமனாகவுள்ள இரண்டு வலுக்கள் பெருக்கப்படும் போது அவற்றின் சுட்டிகள் கூட்டப்படும்.அத்துடன் பெறப்படும் வலுவும் அதே அடியைக் கொண்டிருக்கும்.

**பயிற்சி**

1. $5^4 \times 5^6 = 5^{4+6} = 5^{10}$
2. $2^8 \times 2^3 \times 2^5 = 2^{8+3+5} = 2^{16}$
3. $5 \times y^8 \times y^2 \times y^4 = 5y^{8+2+4} = 5y^{14}$
4. $a^8 \times 2b^5 \times 3a^2 \times b^6 = 2 \times 3 \times a^8 \times a^2 \times b^5 \times b^6 = 6a^{10}b^{11}$
5. $x^3 \times x^6$ = …………………………….
6. $x^2 \times x^2 \times x^3$ = …………………………..
7. $2x^3 \times x^5$ = …………………………….
8. $5p^2 \times 2p^3$ = …………………………...
9. $m^2 \times 2n^2 \times m$ = …………………………...
10. $X^{15} \times X^{10} \times X^8$ = …………………………...
11. $3a^6 \times 2a^8$ = …………………………...
12. $m^{12} \times n^8 \times m^6 \times n^7$ = …………………………...
13. $2X^8 \times y^9 \times x^7 \times 5y^6$ = …………………………...
14. $a^2 \times b^3 \times c^7 \times a^5 \times b^2 \times c^4$ = …………………………...
15. $2a^2 \times 3b^2 \times 5a \times 2b^3$ =……………………………

**05.சமனான அடிகளை உடைய வலுக்களை வகுத்தல்.**

> **விதி - 2**
> சம அடிகளைக் கொண்ட எண்கள் வகுக்கப்படும்போது அவற்றின் அடுக்குகள் கழிக்கப்படும்.
> $x^m \div x^n = x^{m-n}$

$a^5 \div a^3$ என்பதை $\frac{a^5}{a^3}$ என எழுதலாம்.

$\frac{a^5}{a^3} = \frac{a\times a\times a\times a\times a}{a\times a\times a} = a \times a = a^2$

* ஆகவே அடிகள் சமனாகவுள்ள வலுக்களை வகுக்கும் போது சுட்டியானது வகுபடுமெண்ணின் சுட்டியிலிருந்து வகுக்கும் எண்ணின், சுட்டியைக் கழித்துப் பெறப்படும்.

* அத்துடன் பெறப்படும் வலுவும் அதே அடியைக் கொண்டிருக்கும்.

**பயிற்சி**

1. $2^{15} \div 2^8 = 2^{15-8} = 2^7$
2. $15x^{12} \div 3x^5 = \frac{15x^{12}}{3x^5} = 5x^{12-5} = 5x^7$
3. $\frac{a^{10}\times a^8}{a^7} = a^{8+10-7} = a^{11}$
4. $m^{21} \div m^8$ = …………………………...
5. $a^5 \div a^3$ = …………………………...
6. $\frac{x^7}{x^2}$ = …………………………...
7. $2x^8 \div x^3$ = …………………………...
8. $4p^6 \div 2p^3$ = …………………………...
9. $36y^{10} \div 4y^4$ = …………………………...
10. $\frac{10m^5}{2m^2}$ = …………………………...
11. $\frac{x^2\times x^4}{x^3}$ = …………………………...
12. $\frac{2x^3 \times x}{4x}$ = …………………………...
13. $n^5 \div (n^2 \times n)$ = …………………………...
14. $\frac{8p^{10}\times 8q^4}{4p^4 \times 2q^8}$ = …………………………...
15. $\frac{2p^4\times 2q^3}{p \times q}$ = …………………………...

**மறைச்சுட்டி**

> **விதி - 3**
> ஓர் மறைச்சுட்டியை நேர்ச்சுட்டி ஆக்குவதாயின் அவ்வெண் நிகர் மாறாக எழுதப்படும். $x^{-m} = \frac{1}{x^m}$

**உதாரணம்**

$5^{-3} = \frac{1}{5^3}$

2. $\frac{1}{7^{-3}} = 7^3$

3. $3x^{-2} = 3 \times \frac{1}{x^2} = \frac{3}{x^2}$

4. $2x^{-2}y = \frac{2y}{x^2}$

9 ஆம் பக்கம் பார்க்க...

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 9** **கணிதம்** **அலகு 12**

9 ஆம் பக்கத் தொடர்ச்சி...
பயிற்சி

**06.நேர்ச் சுட்டியில் எழுதுக.**

1. $3^{-4}$ = ………………………………
2. $x^{-3}$ = ………………………………
3. $2x^{-1}$ = ………………………………
4. $5p^{2}q^{-2}$ = ………………………………
5. $\frac{3}{x^{-2}}$ = ………………………………
6. $\frac{2x}{x^{-4}}$ = ………………………………
7. $\frac{a}{2b^{-3}}$ = ………………………………
8. $\frac{m}{(2n)^{2}}$ = ………………………………
9. $\frac{t^{-2}}{m}$ = ………………………………
10. $\frac{p}{q^{-2}}$ = ………………………………
11. $\frac{y^{-2}}{x^{-2}}$ = ………………………………
12. $\left(\frac{3x}{2y}\right)^{-2}$ = ………………………………

**07.பெறுமானம் காண்க.**

**உதாரணம்**

$$2^{-3} = \frac{1}{2^{3}} = \frac{1}{(2\times 2\times 2)} = \frac{1}{8}$$

$$\left(\frac{1}{3}\right)^{-2} = \frac{1^{-2}}{3^{-2}} = \frac{3^{2}}{1^{2}} = \frac{(3\times 3)}{(1\times 1)} = 9$$

1. $2^{-2}$ = ……………………………………
2. $10^{-3}$ = ……………………………………
3. $-4^{-3}$ = ……………………………………
4. $\frac{1}{4^{-2}}$ = ……………………………………
5. $\frac{3^{-2}}{4^{-2}}$ = ……………………………………
6. $2^{-7}$ = ……………………………………
7. $5^{-2}$ = ……………………………………
8. $3^{-2}$ = ……………………………………
9. $\frac{5}{5^{-2}}$ = ……………………………………
10. $\left(\frac{2}{3}\right)^{-2}$ = ……………………………………

**08.பூச்சியச்சுட்டி**

*** சுட்டி பூச்சியமாக சுட்டியின் வலு பூச்சிய சுட்டி எனப்படும்**

$$X^{0} = 1$$

1. $2^{0}\times 3$ = ……………………………...
2. $-4^{0}$ = ……………………………...
3. $\left(\frac{2}{3}\right)^{-2}$ = ……………………………...
4. $\left(\frac{x^{2}}{y^{2}}\right)^{0}$ = ……………………………...
5. $5^{0} + 1$ = ……………………………...
6. $\left(\frac{2}{3}\right)^{0}$ = ……………………………...
7. $(2ab)^{0} - 2^{0}$ = ………………………
8. $(abc)^{0}$ = ……………………………...

**09. வலுவின் வலு**

*** வலுவின் வலுவாக உள்ள ஒரு கோவையைச் சுருக்கும் போது ஒன்றோடொன்று பெருக்கலாம்.**

$$(a^{m})^{n} = a^{m\times n} = a^{mn}$$

**உதாரணம்**

1. $(2^{4})^{2} = 2^{4\times 2} = 2^{8}$
2. $(2x^{2}y^{3})^{2} = 2^{2}x^{2\times 2}y^{3\times 2} = 4x^{4}y^{6}$
3. $(p^{3})^{4}\times (x^{2})^{0} = p^{3\times 4}x^{2\times 0} = p^{12}\times x^{0} = p^{12}\times 1 = p^{12}$

**பயிற்சி**

1. $(2^{3})^{2}$ = ……………………………...
2. $(3^{2})^{-1}$ = ……………………………...
3. $(a^{2}b^{2})^{2}$ = ……………………………...
4. $(2x^{2})^{3}$ = ……………………………...
5. $(p^{-2})^{-4}$ = ……………………………...
6. $(y^{4})^{1/2}$ = ……………………………...
7. $\left(\frac{x^{5}}{x^{2}}\right)^{3}$ = ……………………………...
8. $\left(\frac{a^{3}}{a^{3}}\right)^{2}$ = ……………………………...
9. $\left(\frac{m^{3}}{n^{3}}\right)^{-2}$ = ……………………………...
10. $(a^{0})^{2}\times a$ = ……………………………...

ஆக்கம் : தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)
யா/செங்குந்த இந்துக் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் : - திரு ஞானமணி இரத்தினசிங்கம்
(ஓய்வுநிலை விரிவுரையாளர்)
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

**இவ் வினாக்களுக்கான விடைகள் நாளை பிரசுரமாகும்.**

## வேகக்கட்டுப்பாடு இழந்து கடைக்குள் புகுந்தது பஸ்

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அண்மித்த பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் ஒன்று கடை ஒன்றுக்குள் புகுந்துள்ளதுடன் தொலைபேசி இணைப்பு கம்பத்தையும் சேதப்படுத்தி உள்ளது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பஸ் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வேகக்கட்டுப்பாட்டை இழந்து கரடிப்போக்கு சந்திக்கு அண்மையாக உள்ள உணவகம் ஒன்றுக்குள் புகுந்துள்ளதுடன் அருகிலிருந்த தொலைபேசி இணைப்பு கம்பத்தையும் உடைத்து சேதப்படுத்தி உள்ளது.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir





# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

வே.வரதசுந்தரம்

பகவான்பாபா எங்கும் உள்ளவர். ஏழைகளுக்குக் கைகொடுக்கும், சுவாமியின் மானுடசேவைப் பணிகளில் நாம் நம்மை இணைத்துக்கொள்ள வேண்டும். மக்கள் சேவையை அமைதியாக எவ்வித ஆரவாரமுமின்றி ஆற்றவேண்டும். சாயிஅன்பர்கள் ஆகிய நாம் பின்வருமாறு பிரதிக்ஞை எடுக்க வேண்டும்.

‘ஆகக்குறைந்தது ஒருநல்ல காரியத்தையேனும் தினமும் செய்வேன்’.

இவ்வாறு பிரதிக்ஞை எடுக்குமாறு அழைப்பு விடுத்தவர் சாயிபக்தர் பிரபல கிரிக்கெட் வீரர் சுனில் கவஸ்கார். அவர்தன்சாயி அனுபவத்தைக் கூறக்கேட்போம்.

‘எமது இல்லத்தில் கடவுளர் சொரூபங்களுடன் ஒருசிறிய சுவாமி அறையுண்டு. அங்கு தினமும் வழிபாடு செய்வோம். 1970 ஆம் ஆண்டில் ஒருநாள் அம்மா அடுக்களைச் சுவரில் ஒரு சுவாமியாரின் உருவத்தைக் கண்டார். அவ்வுருவம் அவரின் உள்ளத்தை ஈர்த்துவிட்டது. அந்த சுவாமியாரின் படமொன்று பெறவேண்டும் என்று அம்மா துடியாய்த் துடித்தார். அருகிலிருந்த பத்திரிகை வியாபாரியிடம் விசாரித்த போது அங்கு அது கிடைக்கவில்லை. சற்றுத் தொலைவிலிருந்த சுவாமி படங்கள் விற்கும் கடைக்கு விரைந்தார். அங்கிருந்த படங்களுள் இச்சுவாமியின் படமிருக்கவில்லை. பலவாறு முயன்று கடைச்சிப்பந்திப் படமொன்றைக் காட்டினார். அப்படத்தில் தான்கண்ட சுவாமியைக் கண்டு வியந்து போனார். அதுவோ பகவான்பாபா தன்கையை உயர்த்தி ஆசீர்வதிக்கும் காட்சி.

அந்த பகவான் பாபா படம் எந்தன் அறைச்சுவரில் பொருத்தப்பட்டது. எனவே நாள்தோறும் நான. கண் விழித்ததும் பகவான் தன்கரம் உயர்த்தி ஆசீர்வதிக்கும் தோற்றமே எந்தன் முதற்தரிசனம். அறைக்கதவு திறந்திருப்பின் வீட்டுக்கு வருகை தரும் அனைவரும் பாபா தரிசனம் பெறுவர்.

ஒரு நிகழ்வு எந்தன் மனதில் பசுமை நினைவாகவுள்ளது. அப்பொழுது கிரிக்கெட் விளையாட்டு சுற்றுலாவில் ஆஸ்திரேலியா சென்றிருந்தோம். சறுக்கியமை காரணமாக என்தொடைச் சதை பாதிப்



புற்றது. காயத்தைப் பரிசோதித்த அந்நாட்டு மருத்துவர் காயம் குணமாக குறைந்தது மூன்று வாரங்களாகும் என்றும், அதன் பின்னரும் எனக்கு ஒரு கிழமை ஓய்வு தேவை. அதன் பின்னரே நான் மீண்டும் விளையாட்டில் ஈடுபடமுடியுமென்று உறுதியாகக் கூறினார். இன்னும் ஒருவாரத்தில் முதலாவது டெஸ்ட் போட்டி தொடங்கவுள்ள நிலையில் இது எனக்குப் பாரிய இடியாயிற்று. மருத்துவ ஆலோசனைப்படி உடற்பயிற்சிகளை நான் செய்த போதும் உடல்தேறுதல் திருப்தியாக இருக்கவில்லை.

இச்செய்தியைக் கேள்வியுற்ற எனது குடும்பத்தினர் இப்போட்டிக்கான செய்தி சேகரிக்க ஆஸ்திரேலியாவுக்கு வருகை தந்த பத்திரிகையாளர்கள் மூலம் ஸ்ரீசத்திய சாயிபாபா ஆசீர்வதித்த விபூதியினை அனுப்பி வைத்தனர். போட்டி தொடங்க மூன்றே மூன்று நாள்களேயுள்ள நிலையில் அவதார புருஷரின் விபூதி நமக்குக் கிடைத்தது.

பாபா ஆசீர்வதித்த விபூதியினை நான் நாள்தோறும் பல தடவைகள் சாத்தி வந்தேன். அதனைத் தொடர்ந்து எனதுகால் குறிப்பிடத்தக்க அளவு குணமடைந்தது. இரண்டேயிரண்டு நாள்களில் என்னால் சாதாரணர் போன்று நடக்க முடிந்தது. இருப்பினும் காலில் விறைப்புக் காணப்பட்டது. என்னை எடுத்த மாத்திரத்தே, நீக்கிவிடாது, ஒரு வாய்ப்புத் தருமாறு முகாமையாளரிடம் கோரினேன். என்னைப் பரீட்சித்த பின்னர் அவரனுமதி கிடைத்தது. விபூதி ஆசீர்வாதத்தினால் அப்போட்டியில் விளையாடும் வாய்ப்புக் கிட்டியது.

ஓராண்டின பின்னர் நான் சென்னையில் இருந்த வேளை சுவாமியங்கு வருகின்றார் என்றறிந்தேன். இங்குதான் பகவான் பாபாவின் முதல் தரிசனம் எனக்குக் கிடைத்தது. வெஸ்ட்இண்டீஸ் விளையாட்டு வீரர் அல்வின் கள்ளிசரண் என்னுடன் இணைந்து கொண்டார். நான் பாபாவின் படங்களை நிறையப் பார்த்திருக்கிறேன். ஆயினும் பகவானை முதன் முதலாகத் தரிசித்தது மறக்கமுடியாத அனுபவம்.

பாபா வந்ததும் ஓரொளி அவர் முகத்தில் பரவியது. சுவாமியின் புன்னகை அங்கிருந்த அடியார்கள் அனைவரது முகங்களிலும் சிரிப்புப் பரவியது. கிரிக்கெட் விளையாட்டில் எதிர்த்தரப்பினை வென்ற வேளையில் பெற்ற மகிழ்ச்சியிலும் பார்க்க பாரிய பெருமகிழ்ச்சியில் திளைத்தேன். மனதில் அமைதியை உணர்ந்தேன்.

நாமிருவரும் சுவாமியிடம் ஒருவேண்டுதலை முன்வைத்தோம். ‘சுவாமி! உங்கள் அடியார்கள் தங்களுக்குப் பல்வாறு சேவையாற்றுவதைப் பார்க்கிறோம். நாங்களோ கிரிக்கெட் ஆட்டக்காரர்கள். எங்களால் மருத்துவர்கள், ஆசிரியர்கள் போன்று மக்கள் சேவையில் ஈடுபடமுடியாது. எனவே நாம் எவ்வாறு மானுடசேவை ஆற்றலாம் என்று வழிகாட்டுங்கள்.’

‘ஏன்! ‘வாழ்க்கையே ஒரு விளையாட்டு. அதனை செவ்வனே விளையாடுங்கள்’ என்ற தொனியில் நீங்கள் சுவாமிக்கு ஒருகிரிக்கெட் விளையாட்டுப் போட்டி ஒழுங்கு செய்யலாமே! விளையாட்டு மூலம் இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையே, நாடுகளுக்கிடையே உலகளாவிய ஒற்றுமையை உருவாக்கி மானுட சேவை ஆற்றலாமே!’ இப்படிச் சிரித்தவாறு சொன்னார் பாபா.

இதன் பயனாக புட்டபர்த்தியில் சர்வதேச ஒருநாள் ஸ்ரீ சத்தியசாயி பாபா ஒற்றுமைக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி



வெகுசிறப்பாக புட்டபர்த்தியில் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போட்டியின்போது, பல மூத்த கிரிக்கெட் வீரர்கள் கௌரவிக்கப்பட்டர். அச்சமயம் பாபா சச்சின் டெண்டுல்காரின் முதுகில்தட்டி ’நான் நின்னுடன் இருக்கிறேன்’ என்று சொன்னமையையும், அதனைத் தொடர்ந்து சச்சின் தனியொருவனாக தனது துடுப்பாட்டத்தினால் ஆஸ்திரேலியாவின் உலக வெற்றியை தள்ளாடச் செய்தமையையும் யார்தான் மறப்பர்?

நான் எனது அறுபதாவது பிறந்த தினத்தைத் எனது குடும்பத்தினருடன் புட்டபர்த்தியிலுள்ள ஸ்ரீ சத்தியசாயி பாபா ஆசிரமத்தில் சமயவழிபாட்டுடன் கொண்டாடினேன். பகவான் பாபா தரிசனம், ஆசீர்வாதம் பெற்றுபெருமகிழ்ச்சி அடைந்தோம். நான் எனது அறுபதாவது பிறந்ததினத்தை இதனிலும் சிறப்பாகக் கொண்டாடியிருக்க முடியாது. எந்தன் சுவாமியின் தரிசனம், ஆசிபெற்ற தினம். இது கிடைக்க முடியா பெரும்பாக்கியம். இதுவே எந்தன் வாழ்க்கையின் உச்சம்.

பகவான் பாபா சமாதியடைந்தமை கேள்வியுற்றதும், நானும் எனது மனைவி மார்ஷ்னெலும் புட்டபர்த்தி விரைந்தோம். நான் கலங்கிவிட்டேன். எனது மனைவி மார்ஷ்னெய்ல் தாங்கொணாத துயரில் விக்கிவிக்கி அழுதார்.

பாபா எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் உந்து சக்தியாக விளங்கியவர். அவர் எமக்கு கண்கண்ட இறையவதாரம்.’

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்

## ஓர் அனுபவத் தொடர்

அங்கம் 13

எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்.



**அவதானிப்பு 3 :**

**குறைபாடுகள் - வெளிச்செல்லுகை**

சிகிச்சை மையத்திற்கு வருபவர்களுக்கு சுகதேகிகளாக வீடு போய் சேருவோம் என்ற எண்ணமும் ஆர்வமும் கூடுதலாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். இருந்தும் ஏனைய நாடுகளில் இருக்கின்ற நிலைமையைப் போல தொற்றாளர்களை பராமரிக்கும் போது இருக்கின்ற கரிசனை அவர்களை வெளியனுப்பும் போதும் இருக்கவேண்டும். ஆனால், எமது வைத்தியசாலையில் சுகமடைந்ததும் வெளியேற்றினால் போதும், அதன் பின்னரான காலத்தில் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற எவ்வித கரிசனையும் இருப்பதில்லை. இது இங்கு மிகவும் கவலைக்கிடமான விடயமாகும். தனிமைப்படுத்தும் நாள் முடிந்ததும் ஏற்றி அனுப்பினால் தமது கடமை முடிந்தது என்ற எண்ணமே மேலோங்கியுள்ளது.

அதிலும் குறிப்பாக அவர்கள் நோயாளி காவு வண்டியிலேயே கொண்டு செல்லப்பட்டு வீடுகளில் விடப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கு அமைய, தங்களின் தனிப்பட்ட வாகனங்களில் செல்ல அனுமதியில்லாத நிலை



யில் நாள் முழுவதும் காத்திருக்க வேண்டிய நிலைமையையும் காணமுடிந்தது. இது அவர்களுக்கு வைத்தியசாலையில் தங்கியிருந்த நாள்களை விட துன்பகரமானதாகவே கருதப்படக்கூடியது.

இந்த நிலைமை சீர்செய்யப்பட்டு ஓர் ஒழுங்குமுறைக்கு ஏற்ப கொண்டுவரப்பட வேண்டும். PCR பரிசோதனை முடித்து இங்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் பரிசோதனை முடிவின் 10 ஆம் நாளின் பின்னர் தாங்கள் வீடு செல்லலாம் என்பதை அறிந்து வைத்துள்ளார்கள். ஆனால் சிகிச்சை முடிந்து அவர்கள் வெளிச்செல்லும் பொறிமுறையின் பிரகாரம் அந்தந்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளின் நோயாளர் காவு வண்டியின் மூலமே வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படுவர். நோயாளிகள் அவர்களது தனிப்பட்ட வாகனங்களில் செல்ல முடியாது என்பது இங்குள்ள பொறிமுறை. இதனால் ஒரு நோயாளி சிகிச்சையின் போது தனது 10 ஆவது நாள் நிறைவடைந்திருப்பின் அன்றைய தினம் அவர் வீடு செல்வதற்காக மிகவும் ஆர்வமாக காலையிலேயே தன்னை தயார்ப்படுத்திக்கொள்வார். வீடு செல்வதற்காக நுழைவாயிலுக்கு வருகை தந்துவிடுவார்கள். ஆனால் அவர்களை கொண்டுசெல்வதற்கான நோயாளர் காவுவண்டி எந்நேரத்தில் வருகை தரும் என அறிந்திருக்க மாட்டார்கள். தங்களது உடமைகளுடன் அதனை எதிர்நோக்கி காத்திருப்பார்கள்.

இத்தருணத்தில் வைத்திய பிரிவினரால் நோயாளர்காவு வண்டிக்கு தொடர்புகளை மேற்கொள்ளும் போது அவர்களிடமிருந்து முறையாகப் பதில் கிடைப்பதில்லை. சில நேரங்களில் நோயாளர்காவு வண்டி நிலையத்திற்கு வர இரவு நேரம் கூட ஆகலாம். அதன் பின்னர் செல்லும் போது அவ்வாகனத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அதாவது அன்றைய தினம் வெளிச்செல்லும் நோாளிகள் அனைவரும் இருப்பார்கள். அதே வேளை ஒவ்வொரு நோயாளியும் ஒவ்வொரு பிரதேசத்தினை வதிவிடமாகக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொருவரையும் கொண்டு சென்று விட்டு திரும்புகையில் நோயாளி ஒருவர் தனது வீட்டினை அடைய நள்ளிரவினையும் எட்டக்கூடும்.

**பரிந்துரைகள்**

இதற்கான சிபார்சாக நான் கூற விளைவது வைத்திய நிர்வாகம் அன்றைய தினம் வெளிச்செல்ல இருக்கும் நோயாளர்களின் விவரத்தினை ஏற்கனவே திட்டமிட்டு வைத்திருக்கும். அதன் பிரகாரம் சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வாகனத்தின் நேர ஒழுங்கு, சாரதியின் இயக்கநிலை என்பவற்றை அறிந்து அவை தொடர்பான விடயங்களினை ஒரு தற்காலிகமாக வாவது (Tentative) ஒழுங்கமைத்து வைத்திருக்க முடியும். இதற்கமைய வைத்திய நிர்வாகம் வாகனம் வரும் நேரத்தினை அறிந்து வாகன ஓட்டத்தினை தீர்மானித்து நிர்வாகம் நோயாளர் செல்லும் நேரத்தினை அவர்களுக்கு தெரியப்படுத்தலாம். அவர்களும் அதற்கேற்றால் போல் குறித்த நேரத்தில் தங்களை தயார்படுத்திக்கொள்வார்கள்.

ஏற்கனவே கூறப்பட்டது போல காலையிலிருந்து உடமைகளுடன் நீண்ட நேரம் காத்திருந்து



சலிப்படைந்து வீடு செல்வது நியாயமற்றதான ஒன்று. எனவே முறையாக திட்டமிட்டு ஓர் ஒழுங்கமைப்புக்குள் தொடரான நிலையில் செயற்பட முடியும். அல்லது இயல் தன்மை அடிப்படையில் சிகிச்சை நிலையத்திற்கென அர்ப்பணிப்பான நோயாளர்காவு வண்டி ஒன்றினை ஒழுங்கமைத்து அதன் மூலம் சிறப்பாக இயங்கிக்கொள்ள முடியும் என்பது இன்னொரு மாற்றுக்கருத்து.

**அவதானிப்பு 4 :**

**குறைபாடுகள் - சுகாதார வசதிகள்**

இங்கு அனுமதிக்கப்படும் நோயாளிகள் PCR பரிசோதனையில் Positive முடிவுகள் பெறப்பட்டவர்களே அனுமதிக்கப்படுகின்றார்கள். அதிலும் PCR முடிவுகளின் தாமதம் போன்ற காரணங்களால் நோயின் வீரியம் குறையும் காலங்களிலேயே கூடுதலான நபர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். பலர் வேறு எந்தவொரு நோய் அறிகுறியும் இல்லாமல் சாதாரண ஒரு நிலையிலேயே அங்கு வருகின்றார்கள். எனினும் முதலிலேயே அனுமதிக்கப்பட்ட மற்றும் நோய் மாறும் தறுவாயிலுள்ளவர்களுடனேயே புதிதாக வருபவர்கள் தங்கவைக்கப்படுகின்றமையை நான் குறிப்பிட்டுள்ளேன். இங்கு நான் பிரதானமாக குறிப்பிட விரும்புவது எவ்வித சுகாதார பரிசோதனையுமின்றி எல்லோரும் ஒன்றாக தங்கவைக்கப்படுவதனால் வேறு நோய் உள்ளவர்களினால் மற்றவர்களுக்கும் நோய்த்தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. சாதாரண ஆஸ்துமா மற்றும் தொற்றா நோய்கள் தவிர்த்து ஏனைய நோய் அறிகுறியுள்ளோரால் பாதகமான நிலையினை எதிர்கொள்ள நேரிடும். சாதாரணமான வீட்டு தனிமைப்படுத்தலில் இருப்பதனை விட இங்கு வித்தியாசமான நிலை காணப்படுகிறது. சிகிச்சைக்காக வந்த நிலையில் வேறு நோய்களுக்கு ஆளாகாது அதற்கேற்றால் போல் சுகாதார முறைப்படி அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். அத்துடன் சுகாதார பொறிமுறையினை மேம்படுத்துவதற்காக நான் முதலில் குறிப்பிட்டது போல் குறைந்த வளத்துடன் செயற்படும் நிர்வாகத்தால் நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு பேணுவதென்பது கடினமான விடயம் என்பதை நாம் அறிவோம். இங்கு வசிக்கும் காலங்களில் நோயாளிகள் தங்களது அலுவலகம் அல்லது வீடு எனக்கருதி செயற்பாடுகளை கரிசனையுடன் சுகாதாரத் தொழிலாளர்களுடன் இணைந்து செயற்படுத்த வேண்டும். சுகாதாரத் தொழிலாளர்களின் கடமைகளை நேரடியாகக் கண்காணிக்க முடியாவிட்டாலும் ஏதோ ஒரு பொறிமுறையினூடாக நிலைமைகளை அவதானித்து அது தொடர்பான பின்னூட்டங்களை பெற்று செயற்பாடுகள் சீராக இடம்பெறுகின்றது என்பதை உறுதி செய்யவேண்டும். அல்லாதுவிடின் சமூக ஊடகங்களுக்கூடாக தெரியவேண்டிய நிலை ஏற்பட்டு மிகவும் அர்ப்பணிப்பான சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் இத்துறையினருக்கு அசௌகரியங்கள் ஏற்படும் வாய்ப்புள்ளன.

**பரிந்துரைகள்**

இதற்காக வைத்திய நிர்வாகம் நோயாளிகளுக்கான இதர நோய்கள் குறித்த பரிசோதனையினை மேற்கொள்ளாவிடினும் சாதாரணமாகவேனும் அவற்றினை அறிய முயல வேண்டும். நோயாளி சிகிச்சை நிலையத்தில் உள்நுழையும் போது கட்டாயமாக அவரது பிற நோய்த்தாக்கம் குறித்து அறிந்து கொள்வது நலனாகும். அத்துடன் ஆரோக்கியமான சுகாதார நலனை பேண சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களில் (Guidelines) மற்றும் சுற்றறிக்கைகளில் (Circulars) குறிப்பிடப்பட்ட ஒழுங்குமுறைகளை சுகாதார தொழிலாளியூடாக செய்ய வேண்டும். இருப்பினும் அவர்களை கொண்டு முழுமையாக செய்து முடிக்க முடியாது என்பதை நான் நன்கு அறிவேன். எனினும் முடிந்தளவு அவற்றினை நிறைவேற்ற முயல வேண்டும். அத்துடன் நோயாளிகளினை கொண்டு கட்டாய அறிவுறுத்தல்களினாலேயோ அல்லது ஊக்குவிப்புகள் ஊடாக சுகாதார நலன்களை பேண வழிவகை செய்ய வேண்டுமென குறிப்பிட விரும்புகிறேன்.

தொடரும்

காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதாரப் புத்துணர்ச்சிகளை ஏற்படுத்த கிராமமட்ட தொழிற்துறைகள் மேம்பட வேண்டும்

## அங்கஜன் எம்.பி. இடித்துரைப்பு

சாவகச்சேரி நிருபர்

நாட்டில் பொருளாதார புத்துணர்ச்சியை உருவாக்க வேண்டுமெனால் கிராம மட்டத்தில் தொழிற்துறைகளை மேம்படுத்தவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சௌபாக்கிய உற்பத்திக் கிராமம் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு என்ற திட்டத்தின் கீழ் ஒரு பிரதேச செயலகத்துக்கு ஓர் உற்பத்திக் கிராமம் என்ற அடிப்படையில் சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்த உற்பத்திக் கிராமங்கள் தலா ஒருகோடி ரூபா நிதி ஒதுக்கீடு மூலமாக காலாகாலத்துக்கும் நிலைத்து நிற்கவுள்ளன.

அந்தவகையில் யாழ் மாவட்டத்தில் பிரதேச செயலகத்துக்கு ஓர் உற்பத்திக் கிராமம் என்பதற்கு மேலதிகமாக மேலும் நான்கு உற்பத்திக் கிராமங்கள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மேலும் சில கிராமங்கள் இந்தத் திட்டத்திற்குள் உள்வாங்கப்படலாம்.

தென்மராட்சி பிரதேசம் பரந்துபட்ட பிரதேசம் என்பதால் இரண்டு சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் அடுத்த வாரமளவில் உருவாக்கப்படவுள்ளன. வரணி வடக்கு பனை சார் உற்பத்திக் கிராமமாகவும் – மட்டுவில் சந்திரபுரம் தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கிராமமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.



நாட்டில் பொருளாதார புத்துணர்ச்சியை ஏற்படுத்த முதலில் கிராம மட்டத் தொழிற்துறைகளை மேம்படுத்த வேண்டும். கிராம மட்டத்தில் கைத்தொழில் துறையை நம்பி இருப்பவர்கள் முன்னேற வேண்டும். சௌபாக்கிய உற்பத்திக் கிராமம் வேலைத் திட்டம் ஊடாக கிராம மட்ட நிறுவனத்தை இருக்கும் நிலையில் இருந்து அடுத்த படிக்கு கொண்டு செல்ல முடிவதுடன் அதில் தங்கியுள்ள பயனாளிக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும் என்ற சிந்தனையுடன் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் வெற்றி அதில் வரும் பிரதிபலனை அடைந்தால் மாத்திரமே கிடைக்கும். அந்த பிரதிபலனை பயனாளிகள் அடையும் வரை எம்மைக் கண்காணிக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# பஸிலின் நாடாளுமன்ற வருகை; அச்சத்தில் எதிர்க்கட்சிகள்!

## டிலான் பெரேரா கூறுகிறார்



தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்குள் வரும் செய்தி ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறினார்.

கொரோனா வைரஸைப் பார்த்து பயப்படுவதைவிட அவர்கள் அதிகம் பயப்படுகிறார்கள் என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர் –

தற்போதைய கொரோனா பிரச்சினை மற்றும் சமீபத்திய எரிபொருள் விலை உயர்வு இருந்த போதிலும் எதிர்க்கட்சி மற்றும் ஊடகங்களின் முக்கிய தலைப்பாக இப்போது பஸில் ராஜபக்ஷ குறித்தே உள்ளதாக தெரி வித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கும் முடிவுக்கு எதிர்க்கட்சிகள் அஞ்சினால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சரியான முடிவை எடுத்துள்ளதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# இணையம் மூலம் சிறுமி விற்பனை!

## இதுவரை 18 பேர் கைது



15 வயதான சிறுமியை இணையத்தில் விற்ற 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கல்கிஸை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறுமி சுமார் மூன்று மாதங்களாக இந்த முறையில் பல்வேறு வலைப்பக்கங்கள் மற்றும் சமூக ஊடக பக்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

சமூக ஊடகங்களில் சிறுமியை விற்பனை செய்வதற்காக விளம்பரம் செய்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமி பல்வேறு நபர்களுக்கு 10 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபா வரை விற்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சுமார் 20 பேரை கைது செய்ய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களில் 18 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை கல்வி முறையில் விரைவில் புதிய மாற்றங்கள்

ஆங்கில மொழி ஆற்றல் இன்மையால் இளைஞர்கள் பல தொழில்களில் இருந்து விலகியுள்ளனர் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக தொழில் சந்தையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பல தரப்பினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ள போதிலும் முதலாம் வகுப்பில் இருந்து உயர்தரம் வரை ஆங்கில மொழியில் கல்வி வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை எதிர்காலத்தில் முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



தங்களின் பிள்ளைகளுக்கு ஆங்கில மொழியில் கல்வி கற்பதற்கு அனுமதிக்கும் பலர் நாட்டின் சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு ஆங்கில மொழியில் கல்வி வழங்கும் வேலைத்திட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிடுவது வருத்தமாக உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தனிமைப்படுத்தல் மீறல் 433 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் நேற்று காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 433 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியைச் சேர்ந்த 67 பேரும், கம்பளையைச் சேர்ந்த 56 பேரும், குளியாபிட்டியைச் சேர்ந்த 43 பேருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கின்ற போதிலும் மக்கள் தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான நடைமுறைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் கடந்த 20 ஆம் திகதி வெளியிடப்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 45 ஆயிரத்து 532 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பி.சி.ஆர். பரிசோதனைகளில் படிப்படியாக சரிவு ஏற்பட்டுள்ளது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

இலங்கையின் சுகாதார அமைச்சு வெளியிடும் நாளாந்த அறிக்கையின்படி, பி.சி.ஆர். சோதனைகளை நடத்துவதில் படிப்படியாகச் சரிவு ஏற்பட்டு வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனல் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய அவர் –

பி.சி.ஆர். சோதனைகளை நிலையான விகிதத்தில் நடத்துவது மிகவும் அவசியம் என்று தமது சங்கம் முன்பே சுட்டிக்காட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் முக்கியமானது, எழுந்தமானமான பி.சி.ஆர். சோதனைகளைத் தொடர்ந்து நடத்துவதே ஆகும், அதற்காக ஒரு நிலையான எண்ணிக்கை ஒதுக்கப்பட வேண்டும் என்று பெர்னாண்டோ கூறியுள்ளார்.

தற்போதைய நிலைமையில் பி.சி.ஆர். சோதனைகளின் வீழ்ச்சி கொவிட் பரவலில் ஒரு பச்சை விளக்காக இருக்காது. துல்லியமான தரவை உருவாக்காமை காரணமாகவே நாட்டில் பரவும் வைரஸின் உண்மை தோற்றத்தை அடையாளம் காட்ட முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, பி.சி.ஆர். சோதனைகளை நிலையான முறையில் நடத்துமாறு சுகாதார அமைச்சகத்திடம் கோருகிறோம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# கொவிட் தொற்றுக்கு 12 கர்ப்பிணிகள் சாவு

கொவிட் – 19 நோய்த் தொற்றுக்கு இலக்காகி இது வரையில் 12 கர்ப்பிணிப் பெண்கள் உயிரிழந்துள்ளார் என இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர் ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இதுவரையில் நாட்டில் 12 கர்ப்பிணிகள் கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர் எனவும் இது ஆபத்தான ஒரு நிலைமை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார் இருநூறு பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் கொவிட் தடுப்பூசியை கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் ஊடக சந்திப்பொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயற்பாடுகளில் சீனா!

## இலங்கை முழு ஒத்துழைப்பு வழங்குகின்றது என்று கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் பகிரங்கக் குற்றச்சாட்டு



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயற்பாடுகளில் சீனா ஈடுபட்டுள்ளது. அதற்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, பூநகரி – கௌதாரி முனைப் பகுதியில் சீன நிறுவனமொன்றால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணையைப் பார்வையிடுவதற்காக புதன் அங்கு சென்றிருந்தபோதே சிறிதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே இலங்கையின் தென் பகுதியிலே கால்வைத்துள்ள சீனா தற்போது வடக்கிலும் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

கௌதாரிமுனை மீனவர்கள் கடலட்டை வளர்ப்புக்கு முன்வைத்த கோரிக்கைகள் மறுக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது சீனர்கள் இங்கு கடலட்டைப் பண்ணையை நடத்தி வருகின்றனர்.

இதனைப் பார்க்கும்போது சீனாவுக்கு கடலட்டை ஏற்றுமதி செய்யும் இடமாக இது விளங்கினாலும் இதற்குப் பின்னால் அரசியல் உள்ளது.

இவ்வாறான விடயம் ஈழத்தமிழர்களுக்கு மாத்திரம் அல்லாது இலங்கைக்கு அண்மையிலுள்ள இந்தியாவுக்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

இதேவேளை, இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் மற்றும் இந்தியாவைக் கண்காணிக்கும் செயற்பாடுகளை சீனா முன்னெடுத்து வருகின்றது. அதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

எவ்வாறாயினும் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள குறித்த கடலட்டை பண்ணை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் – என்றார்.

# கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 433 பேர் சிக்கினார்கள்



தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 433 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறியக் குற்றச்சாட்டில் இதுவரை 45 ஆயிரத்து 532 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கழிவுக் குழிக்குள் விழுந்து ஆண் குழந்தை உயிரிழப்பு

## மஸ்கெலியாவில் பெருந்துயர்



இரண்டரை வயது ஆண் குழந்தை ஒன்று கழிவு குழிக்குள் வீழ்ந்து பரிதாபகரமாக பலியான பெருந்துயர் சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் டனட்டார் பிரிவில் இடம்பெற்றுள்ளது. ஜெய சுந்தரம் சுலஷ்னன் என்ற குழந்தையே இவ்வாறு பலியாகியுள்ளது.

குழந்தை திடீரன புதன் மாலை முதல் காணாமல் போனதையடுத்து, அக்குழந்தையை தேடும் பணி இடம்பெற்றது. இதன்போது வீட்டுக்கு அருகில் இருந்த சாணிக் குழியில் இருந்து குழந்தை சடலமாக மீட்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மஸ்கெலியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மஸ்கெலியாப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குழந்தையின் தாய் குருநாகல் பகுதியிலுள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப் பெண்ணாகத் தொழில் புரிகின்றார் எனவும், தந்தையின் அரவணைப்பிலேயே குழந்தை வளர்ந்துள்ளது எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவமானது மஸ்கெலியா தோட்டப் பகுதியையே பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

### யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதேவேளை, யாழ் மாவட்டத்தின் தற்போதைய அபிவிருத்தி, சமகால நிலைமைகள் தொடர்பில் பாகிஸ்தான் தூதுவருக்குக் காணொலி முறையில் மாவட்ட அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரச அதிபர் (காணி) முரளிதரன், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பு தொடர்பில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய கொரோனா காலகட்டத்தில் விவசாயம், கல்வி, கடற்றொழில் போன்ற விடயங்களை எவ்வாறு மேற்கொள்வது என்றும், அதில் உள்ள சவால்கள் தொடர்பிலும் பாகிஸ்தான் தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

குறித்த சந்திப்புகளில் இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார வர்த்தக ரீதியாக எவ்வாறு உறவுகளை வலுப்படுத்தலாம் என்பது தொடர்பிலும், பாகிஸ்தானில் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு இலவசமாக புலமைப்பரிசில் வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது – என்றார்.

இலங்கை மக்களுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவு எப்போதும் தொடரும் என்றும், இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது மகிழ்ச்சி என்றும் பாகிஸ்தான் தூதுவர் மொஹமட் சாட் கட்டாக் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தூதுவரின் வருகையையொட்டி யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

### கோண்டாவிலில் வன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் பொலிஸார் கூறினர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட வன்முறைக் கும்பலே இந்த அட்டூழியத்தில் ஈடுபட்டது.

சம்பவத்தில் வாகனங்கள் உட்பட பெறுமதியான பொருள்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

வன்முறையில் படுகாயமடைந்த நால்வர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

### பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிஸாரின் பஸ்ஸுக்கு பின் பக்கமாக டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

அதனால் அருகில் இருந்த மின் கம்பம் சேதமடைந்து கொடிகாமம், மீசாலை மற்றும் சாவகச்சேரி உள்ளிட்ட சில பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது.

குறித்த விபத்து சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கொரோனாத் தொற்றுப் பரவலால்

# மேலும் சில பிரதேசங்கள் இன்று தொடக்கம் முடக்கம்



நாட்டில் மேலும் சில பிரதேசங்கள் புதன் காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மொனராகலை, கேகாலை, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆறு கிராமசேவர் பிரிவுகளே

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மொனராகலை மாவட்டத்தில் பிபிலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனுல் வெல கிராமசேவகர் பிரிவும், வரக்கா பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்லவ கிராம சேவர் பிரிவில் நியதுரு பொல இலக்கம் 1,2,3,4 ஆகிய தோட்டங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கேகாலை மாவட்டத்தில் கன்னகம கிராமசேவகர் பிரிவில் தேவாலகந்தவத்த பிரிவு முடக்கப்பட்டுள்ளது.

மேலும், தெஹியோவிட்ட கொடம்பல கிராம சேவகர் பிரிவில் பம்பேகம தோட்டப் பகுதி முடக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் தொடங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலதுவ கிராம சேவகர் பிரிவில் எலுதவ தோட்டம் முடக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தில் எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய கொலனி கிராம சேவகர் பிரிவில் திவித்துரு தோட்டம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை, கம்பஹா, கேகாலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஐந்து கிராமசேவகர் பிரிவுகள் இன்று காலை 6 மணிக்குத் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.